மலைப் பிரசங்கம்

மத்தேயு 5-8

மாணவர்கள் பயிற்சி புத்தகம்

மலைப் பிரசங்கம்

பாடம் -1

மத்தேயு 5:1-6

வருகிற சிந்தைகள்

கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 1 **&** 2

நோக்கம்: தேவனை கிட்டி சேருவதற்கு இயேசு கற்று கொடுத்த முதல் நான்கு பாக்கியங்களையும், மனதில் தோன்றுகிற "வருகிற" சிந்தைகளையும் புரிந்து கொள்ளுதல்.

அவர் திரளான ஜனங்களைக் கண்டு மலையின்மேல் ஏறினார்; அவர், உட்கார்ந்த பொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள். அப்பொழுது அவர் தமது வாயைத் திறந்து அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னது என்னவென்றால்:

ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.
துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்.
சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்து கொள்ளுவார்கள்.
நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்.
-மத்தேயு 5:1-6

எட்டு பாக்கியங்கள் அல்லது எட்டு ஆசீர்வாதமான சிந்தைகள் என்று கூறப்படுகின்ற எட்டு சிந்தைகளையும் இயேசு தன்னுடைய சீடர்களுக்கு கற்பிப்பதின் மூலம் ஆரம்பிக்கின்றார். பாக்கியங்கள் ஏனெனில் ஒவ்வொன்றும் "பாக்கியவான்கள்" என்ற வார்த்தையுடன் முடிவடைகிறது. இந்த சிந்தைகள் ஒவ்வொன்றையுமுடைய சீடர்களை இயேசு ஆசீர்வதிப்பதாக வாக்கு கொடுக்கின்றார். பாக்கியவான்கள் என்ற இந்த வார்த்தை "மகிழ்ச்சி", "ஆவிக்குரிய செழிப்பு", அல்லது "கிருபையின் நிலையில் இருத்தல்" என்று பொருள்படும். அந்த சீடனுடைய வாழ்க்கையில் இந்த ஒவ்வொரு சிந்தையும் எப்படிப்பட்ட ஆசீர்வாதங்களை எவ்விதமாக கொண்டுவரும் என்பதுடன் ஒரு வாக்குத்தத்தத்தையும் உள்ளடக்கியுள்ளது.

இந்த எட்டு ஆசீர்வாதமான சிந்தைகளும் எண்ணங்களின் தோற்றம் அல்லது சிந்தனை ஓட்டத்தின் பாதையை ஒருமுகப்படுத்தி, இயேசுவின் சீடனுடைய நடக்கையில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இயேசுவின் சீடர்கள் வாழ்க்கையை, இவ்விதமான சிந்தையுடன் பார்க்கும் போது, மலை அடி வாரத்தில் கூடி வந்திருக்கிற ஏராளமான மக்கள் சந்திக்கின்ற பலவிதமான வேதனைகளை இயேசுவின் மூலமாக தீர்க்க உதவ கூடியவர்களாக இருக்க முடியும் என்பதை இயேசு இந்த சிந்தைகளைக் குறித்து போதித்த சந்தர்ப்பம் தெரிவிக்கின்றது.

இந்த எட்டு பாக்கியங்களும் ஒவ்வொன்றும் நான்கு பாக்கியங்களடங்கிய இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. முதல் நான்கு பாக்கியங்களும், நாம் தேவனிடமாக வருவதற்கு நம்மை உட்படுத்துகின்ற சிந்தைகளையும் - இயேசுவைத் தேடி மலையின் மேல் ஏறி செல்வதைப் போல நமக்கும் தேவனுக்கும் இடையிலான உறவையும் - இரண்டாவது பகுதியிலுள்ள நான்கு பாக்கியங்களும் தேவனுக்காக செயல்படுவதற்கான சிந்தைகளையும் - மலையினின்று கீழே இறங்கிச் செல்வது போலவும் பிறருடனான நமது உறவை கூறுகின்றது.

இன்று இயேசுவின் சீடர்களாக, நாம் ஒருபோதும் பிரச்சனைகளின் ஒரு பகுதியாக இல்லாமல், பிரச்சனைகளுக்குரிய தீர்வுகளின் பகுதியாக இருக்க வேண்டுமென்று தீர்மானித்த பின்பு, நாம் செய்ய வேண்டிய முதலாவது காரியம் என்னவென்றால் இந்த சிந்தைகளை நன்றாக கற்றுக் கொண்டு, நம்முடைய அனுதின வாழ்க்கையில் இதன்படி வாழ வேண்டும் என்று தீர்மானிக்க வேண்டும். நாம் இவ்விதமாக செயல்படும்போது தேவன் நம்மை ஆசீர்வதிப்பதாக வாக்கு கொடுத்திருக்கிறார்.

ஆவியில் எளிமையுள்ளவர்கள்

கேட்போலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 3

முதலாவது பாக்கியம், யோவான் ஸ்நானகனிடம் யூத தலைவர்கள் கேட்ட கேள்வியுடன் தொடர்புடையதாக இருக்கின்றது. “உம்மைக் குறித்து என்ன சொல்லுகிறீர்?” (யோவான் 1:22). நம்மைக்குறித்து நம்மிடமே சரியான எண்ணம் காணப்படவில்லை என்றால், நாம் ஒருபோதும் நம்முடைய தேவனின் தீர்வாக இருக்க முடியாது. “ஆவியில் எளிமையுள்ளவர்கள்” என்பதை வேத வல்லுநர்கள் “ஆவியில் நொறுங்குண்டவர்கள்” என்றும் மொழி பெயர்க்கலாம் என்று கூறுகின்றார்கள். அதாவது இந்த சிந்தை நொறுக்கப்படுவதை விவரிக்கின்றது - பிரத்தியேகமான ஊழியத்திற்காக, தேவனால் அழைக்கப்பட்டு ஆயத்தப்படுத்தப்பட்டவர்களுடைய வாழ்க்கையில் நாம் காண்கின்றவைகள்.

1. முதலாவது பாக்கியம் ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள். பரலோகராஜ்யம் அவர்களுடையது. (மத்தேயு 5:3)
   தெரிந்தெடு: (பூமி, பரலோகராஜ்யம், எளிமை, ஆவி, செல்வந்தன்)

2. சரியா? தவறா?
   தங்களுக்குறியவற்றை விற்று தரித்திரராக வேண்டுமென்று இயேசு தன்னுடைய சீடர்களுக்கு போதிக்க முயற்சிக்கிறார்.
3. சரியா? தவறா?:
   இந்த பாக்கியத்திற்கு கொடுக்கப்பட்ட வாக்குதத்தமே, இயேசுவை சொந்த இரட்சகராகவும் கர்த்தராகவும் ஏற்றுக் கொள்வதற்கும் கொடுக்கப்பட்டுள்ளது.
4. கீழே கொடுக்கப்பட்டவைகளில் எவைகள் “ஆவியில் எளிமையுள்ளவர்கள்” என்பதற்கு உதாரணமாக கொடுக்கப்பட்ட சிந்தைகள்? (பொருந்துபவற்றை கோடிடவும்)
   அ) தேவனைப் பிரியப்படுத்த நாம் எவ்வளவு நல்லவர்கள் என்று காண்பிக்க முயலுவது.
   ஆ) ஆலயத்தில் உயர் பதவியை விரும்புவது.
   இ) தேவனிடமும் பிறரிடமும் பாவங்களை அறிக்கை செய்வது.
   ஈ) அந்தஸ்து பார்ப்பதை விட்டு சேவை செய்வதை தெரிந்து கொள்ளுதல்
   உ) பிறரை குற்றம் சாட்டுவது
5. மோசேயோடு கூட வேதாகமத்தில் காணப்படுகின்ற வேறு ஒருவரை “ஆவியில் எளிமையுள்ளவர்கள்” என்பதற்கு உதாரணமாக கூறவும்.
6. பிலிப்பியர் 2:5-11ன் படி இயேசு கிறிஸ்துவின் சிந்தையே நம்மில் காணப்பட வேண்டும். உங்களிடம் வேதாகமம் இருக்குமென்றால் அந்த பகுதியை வாசித்துவிட்டு இயேசுவைக் குறித்து விவரிக்கின்ற சிந்தைகளை கோடிடவும்.

வெற்றியை மையமாக கொண்ட	பெருமை
சுயம்	கீழ்ப்படிதல்
அடிமையைப் போல	தாழ்மை
எதிர்க்கும் தன்மை	பேராசை

7. “ஆவியில் எளிமையுள்ளவர்கள்” என்பது ஒரே வார்த்தையில் தாழ்மை என்று கூறப்பட்டுள்ளது.
   கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதிகளை வாசித்து, கேள்விக்கு சரியான பதிலை கோடிடவும்.

   1பேதுரு 5: 5-7 வசன ங்களின்படி யாருக்கு தேவன் கிருபையளிக்கிறார்?
   அ) பெருமையுள்ளவர்கள்
   ஆ) கடின உழைப்பாளிகள்
   இ) உண்மையுள்ளவர்கள்
   ஈ) தாழ்மையுள்ளவர்கள்

   ரோமர் 12:3 நாம் நம்மைக் குறித்து எவ்விதமாக எண்ண வேண்டும்?
   அ) உயர்வாக
   ஆ) தெளிந்த புத்தியுள்ளவர்களாக
   இ) குற்றஞ்சாட்டுபவர்களாக
   ஈ) நம்மைக் குறித்தே எண்ணாதவர்களாக

8. உங்கள் வாழ்க்கையின் ஏதேனும் ஒரு பகுதியில் நீங்கள் ஆவியில் எளிமையுள்ளவர்களாய் காணப்படாத நிலை உண்டா? அப்படியானால் அது எந்த பகுதி? அந்தப் பகுதியில் நீங்கள் எவ்விதமாய் ஆவியில் எளிமையுள்ளவர்களாய் நடந்து கொள்ள முடியும் என்பதைக் குறித்து விரிவாக எழுதவும்.

....
....
....

துயரப்படுகிறவர்கள்

கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 4

துயரப்படுவதற்கான அறிகுறிகள் காணப்பட்டால், தங்கள் விசுவாசம் மங்கிப்போனதாக சில விசுவாசிகள் தவறான எண்ணங்கொண்டவர்களாக இருக்கிறார்கள். இந்த பாக்கியம் துயரப்படுவதை ஆதரிப்பது மாத்திரம் அல்ல - அதனை ஒரு ஆசீர்வாதத்தோடு தொடர்பு படுத்தியுள்ளது. இழப்பினால் துயரம் உண்டாவது சாதாரணமானதுதான். அந்த இழப்புகளிலிருந்து நாம் பல காரியங்களை கற்று கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். நமது துயரங்களை உபயோகித்து மூன்று விதங்களில் தேவன் நம்மை வழிநடத்த நாம் இடம் கொடுக்க வேண்டும். முதலாவது, துயரம், நாம் வாழ்க்கையை குறித்த சரியான கேள்வியை கேட்க உதவுகிறது. இரண்டாவதாக, அது, தேவன் தருகின்ற பதில்களை நாம் கேட்க உதவி செய்கிறது. மூன்றாவதாக, நமது இரட்சிப்போடு கூட தேவன் நமக்கு தருகின்ற ஆசீர்வாதங்களையும் நாம் பெற்று கொள்ள உதவி செய்கிறது.

1. இரண்டாவது பாக்கியம் "துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்" மத்தேயு 5:4
   (தெரிந்தெடு: சிரிப்பு, ஆறுதல், துயரம்)
   அடுத்து வருகின்ற மூன்று கேள்விகளுக்கும் சரியான பதிலை கோடிடவும்
2. இயேசு துயரத்தை குறித்து பேசும்போது, அவர் குறிப்பிட்ட துயரம்
   - அ) மரணத்தினாலுண்டான துயரம்
   - ஆ) பாவத்தினாலுண்டான துயரம்
   - இ) உலகத்தின் நிலையை பார்த்து ஏற்பட்ட துயரம்
   - ஈ) மேலே கூறிய யாவும்
3. யோவான் 11:35-36 வசனங்களின்படி இயேசு ஏன் அழுதார்?
   - அ) இயேசு லாசருவை அதிகமாக நேசித்தார்
   - ஆ) லாசரு மரணமடைவதற்கு முன்பாகவே தான் அங்கு வந்திருக்க வேண்டும் என்று இயேசு விரும்பினார்.
   - இ) மரியாளின் அவிசுவாசத்தை குறித்து
   - ஈ) தானும் மரணமடைய போகிறோம் என்பதை அறிந்ததினால்
4. துயரப்படுகிறவர்களுக்கு இயேசு கொடுத்த வாக்குதத்தம்
   - அ) தங்களுக்கு அது தேவையற்றது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.
   - ஆ) ஒரு நாளில் அவர்களுடைய விசுவாசம் பலப்படும்
   - இ) உயிர்த்தெழுதலின் நம்பிக்கையை ஒருபோதும் புரிந்து கொள்வதில்லை
   - ஈ) ஆறுதலடைவார்கள்

5. சரியா? தவறா?
   பிரசங்கி 7:2-4 வசனங்களில் சாலமோனும் துயரத்தை குறித்து இயேசு கூறுவதை ஏற்றுகொள்கிறார்.
6. சரியா? தவறா?
   துயரம் அவிசுவாசத்தை குறிக்கிறது.
7. சரியா? தவறா?
   துயரப்பட்டதினால் யோபு வாழ்க்கையைக் குறித்த சரியான கேள்வியை கேட்டு, தேவனிடமிருந்து பதிலை தேடி பெற்று கொண்டான்.
8. நாம் நேசிக்கிறவர்கள் மரணமடைவதால் துயரம் ஏற்படும்போது, நாம் ஆசீர்வதிக்கப்படுகிறோம் என்று எண்ணுவது **"இயற்கைக்கு புறம்பானது".** பவுல் துயரப்படுவது சரி என்று கூறுகின்றார். (1தெச 4:13-14) ஆனால் நமது துயரம் எவ்விதத்தில் மாறுபட்டதாய் இருக்க வேண்டும்?
   ....
9. நன்றாக யாவருக்கும் தெரிந்த 23 வது சங்கீதம் மரணத்தையும் நித்திய வாழ்வையும் நாம் எவ்வாறு சந்திக்க வேண்டும் என்பதற்கான பதிலை தருகிறது. 23 வது சங்கீதத்தை வாசித்து விட்டு கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.
   1. உன்னுடைய மேய்ப்பன் யார்?
      ....
   2. உன்னுடைய தேவைகளை சந்திப்பது யார்?
      ....
   3. உன்னுடைய ஆத்துமாவை காப்பது யார்?
      ....
   4. உன்னை சரியான பாதையில் நடத்தி செல்வது யார்?
      ....
   5. மரண நேரத்திலும் உன்னோடு கூட இருப்பது யார்?
      ....
   6. உன்னை ஆறுதல்படுத்துவது யார்?
      ....
   7. உனக்காக ஓர் இடத்தை ஆயத்தம் செய்வது யார்?
      ....
   8. உன் தலையை அபிஷேகம் செய்வது யார்?
      ....
   9. உன்னை நிரம்பி வழிய ஆசீர்வதிப்பது யார்?
      ....
   10. நித்திய காலமாய் உன்னோடு ஜீவிப்பது யார்?
      ....
10. மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைக் குறித்து 23 வது சங்கீதம், மற்றும் பல வேத பாகங்களின் அடிப்படையில் ஒரு விசுவாசியின் மரணத்தை மற்றொரு விசுவாசி எவ்விதமாக உணருகிறார்? உன்னுடைய மரணத்தைக் குறித்து உன்னுடைய எண்ணம் என்ன? உன்னுடைய பதில்களை தடித்த எழுத்துக்களில் காட்டவும். ஒரு அவிசுவாசி உணர்வு எப்படியிருக்கும் என்பதை கோடிட்டு காட்டவும்.

நம்பிக்கை	ஆர்வம்	பயம்
குழப்பம்	பாதுகாப்பு	நேசிக்கப்படுதல்
அமைதி	சாந்தம்	அழிந்து போதல்
பயமுறுத்தல்	அலட்சியம்	ஆறுதல்படுத்துதல்
பாதுகாப்பு	நம்பிக்கையுள்ள	அதைரியப்படுத்துதல்

கிறிஸ்துவைப் பின்பற்றுகின்ற பல மனிதர்கள், தாங்கள் தேவனை விசுவாசிப்பதாகவும் அவரைக்குறித்து நன்றாக அறிந்திருப்பதாகவும் கூறுவார்கள். ஆனால் தேவன் மாத்திரமே ஆறுதல்படுத்தக்கூடிய துயரத்தை அவர்கள் அனுபவித்திருக்கும் வரை அவர்கள் உண்மையில் தேவனை அறிந்திருக்க முடியாது. தங்களை ஆறுதல்படுத்தக் கூடியவரை கண்டுபிடிக்கும்படி அவர்கள் விரட்டப்படும்போது, அவர்கள் தேவனோடு ஆழ்ந்த உறவு கொள்கிறார்கள். தேவனோடு கூட நெருங்கும்படி, உங்களை துயரப்படுத்திய சம்பவம் உங்கள் வாழ்க்கையில் இடம் பெற்றுள்ளதா? அதனை விளக்கமாக கூறுக.

....

....

....

சாந்தகுணமுள்ளவர்கள்

கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 4

சாந்தம் என்பது பலவீனம் என்பது அல்ல. வலிமையுள்ள ஒரு குதிரை தன்னுடைய எஜமானனிடம் சாதுவானதாக அல்லது சாந்தமாக காணப்படலாம். ஆனால் தேவைப்படும்போது தன்னுடைய வீரியம் முழுமையையும் உபயோகப்படுத்த ஆயத்தமாக இருக்கும். இயேசு தன்னைக் குறித்து கூறும்போது "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்" என்று மத்தேயு 11:29 வது வசனத்தில் கூறுகின்றார். அதினால் அவர் பலவீனமானவர் என்பதல்ல. எண்ணாகமம் 12:3 ஆம் வசனத்தில் "மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்த குணமுள்ளவனாயிருந்தான்" என்று வேதாகமம் கூறுகின்றது. என்றபோதிலும் வாக்குதத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு இலட்சகணக்கான மக்களை பலவிதமான சோதனைகளின் மத்தியிலும் வழிநடத்தி செல்லகூடிய அளவிற்கு பலமுள்ளவனாக இருந்தான். சாந்தம் என்பது கட்டுக்குள் அடங்கிய வல்லமை - தன்னுடைய எஜமானனின் விருப்பத்திற்கு இணங்கியது. சாந்தம் என்பது நமது மனோசக்தி ஒழுங்குமுறைகளுக்கு உட்பட்டு இருப்பது. புதிய ஏற்பாட்டின் கிரேக்க மொழி பெயர்ப்பில் சீடன் என்பதும் ஒழுக்கம் என்பதும் ஒரே கிரேக்க வார்த்தையிலிருந்து தோன்றியுள்ளது. சீடனாயிருப்பதற்கு ஒழுக்கம் மிகவும் தேவையானது. தகப்பனின் நுகத்தின் கீழ் வாழ்வது (மத்தேயு 11: 28-30)

1. மூன்றாவது பாக்கியம் "சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியை சுதந்தரித்து கொள்வார்கள் " (மத்தேயு 5:5)
(தெரிந்தெடு : பலம், கொடுத்தல், சாந்தம், சம்பாதி, சுதந்தரி)

2. சாந்தம் என்பதற்கான மற்றொரு வார்த்தை (கோடிடவும்)
அ) பலவீனமான மனோசக்தி
ஆ) எதிர்க்காத
இ) நொறுங்குண்ட
ஈ) வெட்கம்

3. இயேசு கூறியதின்படி சாந்தகுணமுள்ளவர்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குதத்தம்
அ) பரலோகத்தை சுதந்தரிப்பார்கள்
ஆ) உலகத்தை ஆதாயப்படுத்தி கொள்வார்கள்
இ) பூமியை சுதந்தரித்து கொள்வார்கள்
ஈ) பரலோகத்தில் தேவன் தங்களை ஆசீர்வதிக்கும்படி காத்திருக்க வேண்டும்

4. வேதாகமத்தில் "நொறுக்கப்பட்டு" சாந்தகுணமுள்ளவர்களாக காணப்படுகின்றவர்களின் பெயர்களை கூறுக
மோசே (எண். 12:3)
ஏசாயா (ஏசாயா 6:5)
பேதுரு (யோவான் 21:17)
பவுல் (அப். 9:4-6)

5. மேலே குறிப்பிட்ட பெயர்களில் பலவீனமானவர்களின் பெயர்களை குறிப்பிடுக

6. கீழே குறிப்பிடப்பட்டுள்ள வசனங்களில் "சாந்தம்" என்பதற்கு பதிலாக "மனத்தாழ்மை" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு வசனத்தையும் வாசித்து, கொடுக்கப்பட்டுள்ள கேள்விக்கான விடையளிக்கவும்.

சங்கீதம் 25:9 சரியா? தவறா?
சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்தகுணமுள்ளவர்களுக்கு தமது வழியைப் போதிக்கிறார்.

சங்கீதம் 37:11 சரியா? தவறா?
சாந்தகுணமுள்ளவர்கள் எப்போதும் பலமுள்ளவர்களால் அதிகம் துன்புறுத்தப்படுகிறார்கள்.

மத்தேயு 21:4 சரியா? தவறா?
இராஜாக்கள் பலமுள்ளவர்களாகவும் சாந்த குணமுடையவர்களாகவும் இருக்க முடியும் என்று இயேசு மெய்ப்பித்து காட்டினார்.

7. மத்தேயு 11:28-30 பகுதியை வாசிக்கவும். இயேசு தன்னுடைய நுகத்தை ஏற்று கொள்ளும்படி யாரை அழைத்தார்?
அ) வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களை
ஆ) பலமுள்ளவர்களை
இ) அவருக்காக உழைக்க ஆயத்தமாயிருக்கிறவர்களை
ஈ) தங்கள் வாழ்க்கையை மாத்திரம் நடத்தி செல்லுபவர்களை

8. நீங்கள் சுமக்கக்கூடாத அளவிற்கு பாரமான சுமை உள்ளதா? உள்ளதென்றால் அதனை குறிப்படுக
....
....
....

உங்கள் வாழ்க்கை எவ்விதமான சவால்கள் நிறைந்ததாக இருந்தாலும், சாந்தம் எவ்விதமாக உங்கள் நுகத்தை மெதுவானதாகவும் வாழ்க்கையை இலகுவானதாகவும் மாற்றுகிறது ?
....

நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள்

கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 5

சாந்தகுணமுள்ளவர்களாக நாம் தேவனுடைய வழிநடத்துதலை தேடும்போது, நீதியின் மேல் பசிதாகம் ஏற்படுகிறவர்களாக இருக்கிறோம். தேவனை பிரியப்படுத்தும் விதமாக நமது வாழ்க்கையை நடத்த வேண்டும் என்ற விருப்பம் உண்டாகிறது. எது சரியானது என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறோம். எது சரியானதோ அதையே செய்கிறோம். நீங்கள் எதை செய்கிறீர்கள், அதை எவ்விதமாக செய்கிறீர்கள் என்பது தேவனுக்கு மிகவும் முக்கியமானது. எது செம்மையானதோ அதை செய்யவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் - சூழ்நிலைக்கு ஏற்றவாறு அமைந்துள்ளதையல்ல.

1. இரண்டாவது பாக்கியம் “நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் திருப்தியடைவார்கள்” (மத்தேயு 5:5)
   தெரிந்தெடு: (நல்ல எண்ணம், செல்வம், நிரப்புதல், வெற்றி, நீதி)

2. இயேசு எவ்விதமான நீதியைக் குறித்து பேசுகிறார்?
   (சரியான ஒன்றை கோடிட்டு காட்டவும்)
   அ) தேவனின் நீதி நியாயம்
   ஆ) எது சரியோ அதனை செய்வது
   இ) நேர்மை
   ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும்

3. நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்களுக்கு இயேசு கூறிய வாக்குதத்தம் என்ன?
   (சரியான ஒன்றை கோடிட்டு காட்டவும்)
   அ) அவர்கள் இனி ஒருபோதும் பாவம்செய்வது இல்லை
   ஆ) அவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் நீதியுள்ளவர்களாய் இருப்பார்கள்
   இ) அவர்கள் திருப்தியடைவார்கள்
   ஈ) தாங்கள் செய்த வேலைகளுக்கான சன்மானம் அவர்களுக்கு கொடுக்கப்படும்.

4. சரியா? தவறா? சரியானவற்றை மாத்திரம் செய்ய வேண்டுமென்ற விருப்பம், தவறானவற்றை திருத்தி கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தையும் கொடுக்கிறது.

5. சரியா? தவறா? இந்த பாக்கியத்தை இவ்விதமாகவும் கூறலாம். “மகிழ்ச்சியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள்”.

6. மத்தேயு 6:33 வது வசனத்தில் எதற்கு முதலிடம் கொடுத்து பட்டியலிட வேண்டும் என்பதற்கு இயேசு வழிகாட்டுகிறார். இந்த வசனத்தின்படி நம்முடைய வாழ்க்கையில் நீதி எந்த இடத்தில் இருக்க வேண்டும்?

7. 1பேதுரு 2: 24 வது வசனத்தை வாசிக்கவும். இந்த வசனத்தின்படி இயேசு ஏன் நமது பாவங்களுக்காக மரித்தார்?
   அ) நீதிக்கு பிழைத்திருக்கும்படிக்கு
   ஆ) நாம் பாவங்களுக்கு சாகும்படிக்கு
   இ) அ, ஆ இரண்டும்
   ஈ) அ வும் அல்ல ஆ வும் அல்ல

8. ஏசாயா 61:3 ஐ வாசிக்கவும். இந்த வசனத்தின்படி, ஏன் நாம் நீதியுள்ளவர்களாயிருக்கும்படி அழைக்கப் பட்டிருக்கிறோம்.
   அ) மற்றவர்களும் நீதியுள்ளவர்களாயிருக்கும்படி
   ஆ) தேவனுக்கு நம்பிக்கையுள்ளவர்களாயிருக்கும்படி
   இ) ஏனென்றால் கீழ்ப்படியும்படி தேவன் கட்டளை கொடுத்திருப்பதால்
   ஈ) தேவன் மகிமைப்படும்படியாக

9. சங்கீதம் 4:5 ஐ வாசிக்கவும். இந்த வசனத்தில் நீதி எதனுடன் சம்பந்தப்பட்டது என்பதைக் கோடிட்டு காட்டவும்.
   அ) நம்பிக்கை
   ஆ) கீழ்ப்படிதல்
   இ) ஆராதனை
   ஈ) ஊக்கம்

நீதியுள்ள வாழ்க்கை வாழ்வதற்கு உங்கள் வாழ்க்கையிலுள்ள சவால்கள் என்ன? இந்த சவால்களைக் குறித்து நீங்கள் செய்யும்படி தேவன் விரும்புவது என்ன?

....

....

ஒவ்வொரு சிந்தைக்கும் கொடுக்கப்பட்ட வாக்குதத்தத்தை பொருத்துக:

ஆவியில்	பூமியை சுதந்தரித்து
எளிமையுள்ளவர்கள்	கொள்வார்கள்
துயரப்படுகிறவர்கள்	திருப்தியடைவார்கள்
சாந்தகுணமுள்ளவர்கள்	ஆறுதலடைவார்கள்
நீதியின் மேல்	பரலோக ராஜ்யம்
பசிதாகமுள்ளவர்கள்	அவர்களுடையது

மலைப் பிரசங்கம்

பாடம் - 2

கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 6

நோக்கம்: கடைசி நான்கு பாக்கியங்களை புரிந்து கொள்ளுதலும், உலகத்திற்குள் செல்வதற்கு இயேசு கற்று கொடுத்த சிந்தைகள்

இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்
இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்
சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.
நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது. *மத்தேயு 5:7-12*

பாக்கியங்களை அடைவது என்பதை மலை ஏறுவது போன்றது என்று கூறலாம். முதல் பகுதியில் நாம் கற்று கொண்டு "வருகின்ற" முதல் நான்கு பாக்கியங்களும் நம்மை மலை உச்சிக்கு அழைத்து சென்று விட்டது. ஆவியில் எளிமையும், துயரப்படுதலும் மலையின் பாதி உயரத்திற்கு அழைத்து சென்றது. சாந்தகுணம் இன்னமும் சற்று உயரம் அழைத்து சென்றது. நீதியின் மேல் பசிதாகம் நம்மை மலையின் உச்சிக்கு கொண்டு சென்று விட்டது. இந்த சிந்தைகள் நமக்கு தேவனோடு கூட சரியான உறவை ஏற்படுத்தியது.

திரும்பவும் மலையிலிருந்து கீழே இறங்கி வந்த பின்பு நாம் எப்படிப்பட்ட சீடர்களாக இருப்போம்? நீதியினால் நிறைந்தவர்கள் என்று கூறும்போது, பரிசேயர்களைப் போல, சட்டதிட்டங்களை மேற்கோள் காட்டி மற்றவர்களை நீதியுள்ளவர்களாயிருக்கும்படி கூறுகின்றவர்களாக காணப்படுவோமா? பிற மனிதர்களை குற்றவாளிகளென்று தீர்க்கிறவர்களாக காணப்படுவோமா? அப்படியல்ல, இயேசு கூறிய இரண்டாவது பகுதி பாக்கியங்கள் நம்மை முற்றிலும் மாறியவர்களாக, தேவனில் காணப்படுகின்ற சிந்தைகளை பிரதிபலிக்கிறவர்களாக, மலையின் அடிவாரத்திற்கு அழைத்து வரும்.

இரக்கம்

"இரக்கம்" என்றால் நிபந்தனையற்ற அன்பு. தாவீது சங்கீதம் 23:6 இல் இவ்விதமாக எழுதுகிறார். "என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்" தொடரும் என்ற வார்த்தைக்கு அவர் உபயோகப்படுத்திய வார்த்தையின் பொருள் துரத்தி செல் என்பதாகும். தேவனின் நிபந்தனையற்ற அன்பு தாவீதின் வாழ்நாள் முழுவதும் அவனைத் துரத்தி செல்லும் என்பதாகும். நாமும் தேவனைப் போல இருக்க வேண்டுமென்றால், நாமும் பிறர் மீது இவ்விதமான அன்பு கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

1. ஐந்தாவது பாக்கியம், "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் இரக்கம் பெறுவார்கள்" (மத்தேயு 5:6)
   (தெரிந்தெடு: பலம், இரக்கம், அன்பு, கருணையுள்ள, பலவீனம், செல்வம்)
2. சரியா? தவறா? இந்த பகுதியில் தான் வேதாகமம் முதன்முதலாக தேவனுடைய நிபந்தனையற்ற அன்பைக் குறித்து கூறுகின்றது.
3. சரியா? தவறா?: தன்னுடைய சீடர்களும் இந்த நிபந்தனையற்ற அன்பின் கால்வாய்களாக இருக்க வேண்டுமென்று இயேசு விரும்பினார்.
4. தேவனுடைய இரக்கம் நமக்கு எதை உணர்த்துகிறது? (கோடிட்டு காட்டவும்)
   அ) நமக்கு வரவேண்டிய தண்டனையை அவர் நிறுத்தி வைத்துள்ளார்.
   ஆ) நாம் அவருக்கு கீழ்ப்படிந்திருக்கும் வரை அவர் நம்மை நேசிக்கிறார்.
   இ) நாம் பெற்றுக் கொள்ள தகுதியற்றவர்களாய் இருந்த போதிலும் நம்மை ஆசீர்வதிக்கிறார்.
   ஈ) நம்மை ஆசீர்வதிப்பதற்காக நாம் பூரணராகும் வரை காத்திருக்கிறார்.
5. புலம்பல் 3:22-23 வசனங்களை வாசிக்கவும். கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் எப்போதெல்லாம் புதுப்பிக்கப்படுகிறது?
   அ) அனுதினமும்
   ஆ) வாரம் ஒருமுறை
   இ) மாதம் ஒருமுறை
   ஈ) வருடத்திற்கு ஒருமுறை
6. மல்கியா 1:1,2 வசனங்களை வாசிக்கவும். கர்த்தர் மல்கியாவோடு பேசிய முதல் வார்த்தை என்ன?
   அ) நியாயதீர்ப்பு
   ஆ) வருத்தம்
   இ) சிநேகம்
   ஈ) கீழ்ப்படிதல்

7. 1 யோவான் 4:16 வாசிக்கவும். கர்த்தரை விவரிப்பதற்கு யோவான் உபயோகித்த வார்த்தை என்ன?

அ) நியாயதீர்ப்பு ஆ) நீதி

இ) பரிசுத்தம் ஈ) அன்பு

8. இரக்கமுடைய சீடர்களின் குணாதிசயங்களை கோடிட்டு காட்டவும்.

அன்புள்ள	சுய நீதி
தீர்ப்புசெய்கிற	பொறுமை
ஆசீர்வதிக்க விருப்பம்	மன்னிக்கிற சுபாவம்
சுயநலம்	தப்பெண்ணம்

9. இரக்கமுள்ளவர்களுக்கு கர்த்தர் கொடுக்கிற வாக்குத்தத்தம் என்ன?

சமாதானம்	நித்திய வாழ்வு
சந்தோஷம்	இரக்கம்
வெற்றி	புகழ்

மற்றவர்கள் உங்களை இரக்கமுள்ளவர்கள் என்று கூறுகின்றார்களா? எப்படி நீங்கள் மேலும் இரக்கமுள்ளவர்களாக இருக்க முடியும்?

....

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள்

கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 6

நாம் இரக்கமுள்ளவர்களாக இருக்கும்போது நம் நினைவுகளின் தோற்றத்தில் பல கேள்விகள் எழும்புகிறது. அதாவது, மக்கள் பலவிதமான யோசனைகளுடன் நம்மீது அன்பு கூறுகிறார்கள். அவர்களில் பலர் சுயநலவாதிகளாக இருக்கிறார்கள். நிபந்தனையற்ற அன்பை புரிந்து கொள்வது கடினம். விசேஷமாக, இவ்விதமான அன்பை இதற்கு முன்பாக ஒருபோதும் கண்டிராத மக்களிடம் இவ்விதமான அன்பை எதிர்பார்க்க முடியாது. ஆனால் சுயநலமின்றி தேவன் நம்மேல் அன்புகூர்ந்தது போல நாமும், மற்றவர்கள் மேல் நிபந்தனையற்ற அன்பு செலுத்துவோமென்றால், உயிர்த்தெழுந்த கிறிஸ்து நமக்குள் வாசம் பண்ணுவதினால், நாம் அவருடைய அன்பின் வாய்க்கால்களாக விளங்குவோம். நமது இருதயத்தின் யோசனைகள் சுத்தமானதாக இருக்கும்.

1. ஆறாவது பாக்கியம் " இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனை தரிசிப்பார்கள்"

2. சரியா? தவறா?: உண்மையான கிறிஸ்தவ அன்பு, தங்கள் ஆழமான தனிப்பட்ட தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய உள்ளங்களில் உண்டாகிறது.

3. சரியா? தவறா?: இயேசுவின் சீடர்களாக இருப்பவர்கள், பிறரிடம் எதையாகிலும் எதிர்பார்த்தே அவர்களிடம் இரக்கமுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

4. சரியா தவறா: நமது அன்பைக் காட்டிலும் இயேசுவின் அன்பு பரிசுத்தமானது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள கேள்விகளில் சரியான பதில்களை கோடிட்டு காட்டவும்

5. 1 தீமோத்தேயு 1:5 வது வசனத்தை வாசிக்கவும். அன்பு எங்கிருந்து பிறக்கிறது?

அ) சுத்தமான இருதயத்திலிருந்து

ஆ) நல்ல நோக்கங்களிலிருந்து

இ) அதிக முயற்சியினால்

ஈ) தனிப்பட்ட ஒருவரது தோற்றத்திலிருந்து

6. 1 யோவான் 1:7-9 பகுதிகளை வாசிக்கவும். இந்த வசனங்களின்படி, நமது இதயம் எவ்வாறு சுத்தமாகிறது.

அ) கடினமான உழைப்பிலும் அதிக தியாகத்திலும்

ஆ) நமது பாவங்களை கர்த்தரிடம் அறிக்கையிடுவதினால்

இ) விசேஷித்த சடங்காச்சாரங்கள் செய்வதின் மூலமாக

ஈ) பாவத்தை தவிர்க்க வேண்டும் என்று தீர்மானிப்பதினால்

7. 1 யோவான் 1:7-9 வசனங்களின்படி யார் நமது இதயங்களை சுத்திகரிப்பார்?

அ) நம்மை நாமே சுத்திகரித்து கொள்ளலாம்

ஆ) நமது நல்ல செயல்கள் நமது அசுத்தமான செயல்களை மேற்கொள்கிறது.

இ) இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நம்மை சுத்திகரிக்கும்

ஈ) ஆலயத்தில் தலைவர்களாக இருப்பவர்கள்

8. கீழே கொடுக்கப்பட்டவைகளில் எவைகள் சுத்த இதயத்திற்கு உதாரணங்கள்?

அ) கிறிஸ்துவின் அன்பு

ஆ) நமது உண்மையான செயல்கள்.

இ) சுயநலமான எண்ணங்கள்

ஈ) பாவிகளை தவிர்ப்பது

9. ஒரு கிறிஸ்தவன், தேவையுள்ளவர்களுக்கு அன்பையும் இரக்கத்தையும் காண்பிக்கும்போது, அதற்கு பதிலாக அவன் எதிர்பார்ப்பது என்ன?

அ) நன்மதிப்பையும் அந்தஸ்தையும்

ஆ) பிறரால் ஏற்றுக்கொள்ளப்படுவது

இ) அதே அன்பையும் இரக்கத்தையும்

ஈ) எதையும் எதிர்பார்த்தல்ல

10. எவ்விதமாக இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் தேவனை தரிசிக்கிறார்கள்? சரியானவற்றை கோடிடவும்

அ) கர்த்தர் அவர்களுடைய வாழ்க்கையில் செயல்படுகிறார்

ஆ) கர்த்தர் அந்த மனிதனை தன் பக்கமாக இழுத்து கொள்கிறார்

இ) இயேசு அந்த மனிதனில் வாழ்கிறார் என்பதை கர்த்தர் வெளிப்படுத்தி காட்டுவார்

ஈ) அந்த மனிதன் கர்த்தரின் அன்பு பிறரில் வெளிப்படுவதை தெரிந்து கொள்ளுவான்

மற்றவர்களோடு கூடிய உங்கள் உறவில் எவ்விதமான நோக்கம் உடையவர்களாக இருக்கின்றீர்கள்?

....

....

உங்களுடைய நோக்கங்கள் உண்மையாகவே இயேசுவின்பரிசுத்தமான அன்பை வெளிப்படுத்துகின்றனவாக இருக்கின்றதா?

....

....

சமாதானம்பண்ணுகிறவர்கள்

கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 7

கர்த்தரை மனிதகுலம் விரோதித்து கொண்டது. எனவேதான் கிறிஸ்துவின் சீடர்களாக - மலையுச்சிக்கு ஏறியவர்கள் - ஒரு நோக்கத்துடன் திரும்பி வர வேண்டும் - நாம் இதற்கு ஒத்து கொள்வோமென்றால் - தேவனோடு கூடிய நமது உறவில் சரியாக இருக்கின்றோம். அதனால் மற்றவர்கள் தேவனோடு ஒப்புரவாக கர்த்தர் நம்மை உபயோகிக்க முடியும் என்ற கருத்தை தெரிவிக்கின்றது. கர்த்தரின் பணி செய்ய இருப்பவர்கள் எவ்விதமாக செயல்பட வேண்டும் என்பதைக் குறித்து ஏழாவது பாக்கியம் கூறுகின்றது.

1. ஏழாவது பாக்கியம், “சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள்” (மத்தேயு 5:9)
(தெரிந்தெடு: பலம், சமாதானம் பண்ணுகிறவர்கள், பரிசுத்தவான்கள், தேவனுடைய புத்திரர்)

2. சரியா தவறா: கர்த்தரோடு சமாதானமாயிருப்பவர்கள் ஒவ்வொருவரும், மனிதர்களை சமாதானபடுத்துகின்ற ஊழியர்களாக இருப்பார்கள்.

3. சரியா? தவறா?: சமாதானம் பண்ணுகிறவர்கள் என்றால் மனிதர்களை தேவனோடு ஒப்புரவாக செய்கிறவர்கள். மனிதர்களை ஒருவரோடொருவர் ஒப்புரவாக செய்வதற்கும் அவர்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

4. சரியா தவறா : போதகர்களும், மற்ற ஊழியக்காரர்களும் மாத்திரமே மனிதர்களை தேவனோடு ஒப்புரவாகச் செய்ய முடியும்.
2 கொரிந்தியர் 5:14-21 வரை வாசிக்கவும். பின்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ள 4 கேள்விகளிலும் சரியான விடையை கோடிட்டு காட்டவும்.

5. 14 வது வசனத்தின்படி எது நம்மை கர்த்தரின் இரட்சிப்பின் செய்தியை பிறரோடு பகிர்ந்து கொள்ளும்படி செய்கிறது.?
அ) அவருடைய கட்டளைகள்
ஆ) அவருடைய அன்பு
இ) நமது குற்ற மனப்பான்மை
ஈ) நமது தாலந்துகளும் திறமைகளும்

6. 19 வது வசனத்தின்படி தேவன் எவ்விதமாக உலகத்தை கிறிஸ்துவோடு ஒப்புரவாக்கினார்?
அ) அவரை எப்படி திருப்திபடுத்த வேண்டுமென்று அவர் போதித்திருக்கிறார்
ஆ) பாவத்தைப் போல வேறு எதுவும் இல்லை என்று அவர் கூறுகிறார்.
இ) பாவம், நிர்வகிப்பதற்கு அவ்வளவு பெரிய காரியமல்ல.
ஈ) அவர் நமது பாவங்களை எண்ணுவதில்லை.

7. 19 வது வசனத்தின்படி, இரட்சிப்பின் செய்தியை கூறுவது யாருடைய கடமை?
அ) தேவன் தாமாகவே அதை செய்து கொள்வார் அல்லது ஒரு தூதனை அனுப்புவார்.
ஆ) எல்லாம் வேதாகமத்தில் உள்ளது. வேண்டுமென்றால் அவர்களே அதை கண்டு கொள்ளலாம்.
இ) நாமே அந்த செய்தியாளர்கள்.
ஈ) நன்றாக பேசக்கூடிய, தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு சிலரிடமே இந்த ஊழியம் கொடுக்கப்பட்டுள்ளது.

8. பவுலின் மனப்பான்மையை நீங்கள் எவ்விதமாக விவரிப்பீர்கள்?
அ) சாதாரணமானவராக
ஆ) ஆர்வமும் சுறுசுறுப்புமுடையவராக
இ) கோபமும் நியாயந்தீர்க்கிறவராக
ஈ) அக்கறையும் ஆர்வமுமில்லாதவராக

9. கிறிஸ்துவின் தூதுவர்களாக அல்லது ஒருவரோடு ஒருவருக்குள்ள வேற்றுமை அகற்றி ஒப்புரவாகுதலின் ஊழியம் செய்கின்றவர்கள் கைக்கொள்ள வேண்டிய முக்கிய வழிகள் எவையெவை? (சரியானவற்றை கோடிடவும்)
அ) சுவிசேஷத்தை பிறருக்கு விளக்கி கூறுவது
ஆ) ஒழுங்காக ஆலயத்திற்கு செல்வது
இ) கர்த்தருடைய அன்பையும் இரக்கத்தையும் புரிந்து கொள்ளச் செய்ய வேண்டும்.
ஈ) மனிதர்களுடைய பாவங்களைச் சுட்டி காண்பித்து அவர்கள் இன்னமும் நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று அவர்களிடம் சொல்ல வேண்டும்.
உ) தேவனைப் புரிந்து கொள்ள முடியாத மக்களிடம் பொறுமையாக இருக்க வேண்டும்.
ஊ) கர்த்தருக்கும் அவர்களுக்குமிடையேயான தொடர்பு எவ்வளவு முக்கியம் என்பதை அவர்களுக்கு விளக்கி கூறுங்கள்.
எ) பாவிகளோடு உங்கள் நேரத்தை ஒருபோதும் செலவிடாதீர்கள்.

10. ஏன் சமாதானம் பண்ணுகிறவர்கள் தேவனுடைய புத்திரர் என்று அழைக்கப்படுகிறார்கள்?
அ) அவர்கள் கீழ்ப்படிந்து அவருடைய வேலையை செய்கிறார்கள்.
ஆ) அவர்கள் அவரை ஒத்திருக்கிறார்கள்.
இ) அவர்கள் அவருடைய ஆவியினால் பிறந்திருக்கிறார்கள்.
ஈ) அவர்கள் அவருடைய நேசத்தை சம்பாதித்திருக்கிறார்கள்.

பிறர் கர்த்தரோடு ஒப்புரவாகுவதற்கு நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்?
....
....

நீங்கள் யாருடனாவது ஒப்புரவாக வேண்டியதுள்ளதா? யார்?
....
....
....

நீங்கள் அதைக்குறித்து என்ன செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்?
....
....
....

மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் ஒப்புரவாகுவதற்கு நீ என்ன செய்கிறாய்?
....
....
....

துன்பப்படுகிறவர்கள்

கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 8

சமாதானம் பண்ணுகிறவர்களின் பாக்கியத்தை அடுத்து துன்பப்படுகிறவர்களின் பாக்கியம் கூறப்படுவதற்கு ஒரு காரணம் உண்டு. ஒப்புரவாகுதலின் ஊழியத்தை செய்கிறவர்கள், அடிக்கடி வேதனைத் தரக்கூடிய பின் விளைவுகளை சந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். ஏனென்றால் அவர்கள் தங்களைத் தாங்களே இயேசு கிறிஸ்துவோடு அடையாளப்படுத்தி இருக்கிறார்கள். சமாதானமாகிறவர்கள் தங்கள் இருவருக்கும் இடையிலான சண்டையின் நடுவே இயேசுவின் சீடர்களை வைக்கின்றார்கள். சிலவேளையில் இவர்கள் தங்கள் உயிரையே இழக்க நேரிடலாம்.

1. எட்டாவது பாக்கியம், "நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது" என்று கூறுகின்றது.
(தெரிந்தெடு : கவலை, பலம், துன்பப்படுகிறவர்கள், உலகத்தின் செல்வம், பரலோக ராஜ்ஜியம்)

2. சரியா? தவறா?: இந்த பாக்கியம் எந்த காரணத்திற்காகவும் துன்பப்பட்ட எவருக்கும் பொருந்தும்.

3. சரியா? தவறா?: இயேசுவிற்காக தங்கள் ஜீவனை இழந்தவர்கள், இயேசுவே இராஜா என்று நிரூபித்து காட்டுகிறார்கள்.

4. கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு சரியான விடையை கோடிட்டு காட்டவும்.
அப்போஸ்தலர் 5:40-42 வசனங்களை வாசிக்கவும். 41வது வசனத்தின்படி அப்போஸ்தலர்கள் எவ்விதமாக துன்பப்படுதலுக்கு பதில் கொடுத்தார்கள்?
அ) பயத்தால் உறைந்து விட்டார்கள்.
ஆ) அவர்கள் எதிர்த்து போராடினார்கள்
இ) தலைவர்களின் சட்டங்களுக்கு கீழ்ப்படிவதென்று தீர்மானம் பண்ணினார்கள்.
ஈ) இயேசுவின் நாமத்திற்காக அவமானம் அடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமடைந்தார்கள்.

5. 1 பேதுரு 4:12-16 வசனங்களை வாசிக்கவும். 13 வது வசனத்தின்படி கிறிஸ்தவர்கள் பாடுபடுவதை இவ்விதமாக எண்ண வேண்டும்.
அ) வித்தியாசமானதாகவும், வழக்கத்திற்கு மாறுபட்டதாகவும்
ஆ) கர்த்தரின் நியாயத்தீர்ப்பின் அடையாளமாகவும்
இ) கிறிஸ்தவ வாழ்வின் ஒரு பகுதியாகவும், வழக்கமானதாகவும்
ஈ) கையாள்வதற்கு எளிதானதாகவும்

6. 1 பேதுரு 4:14 வது வசனத்தின்படி துன்பப்படுதல் எதற்கு அடையாளம்?
அ) தேவனுடைய ஆவியானவர் உங்கள் மேல் தங்கியிருக்கிறார்.
ஆ) உங்கள் பாவங்களினால் ஏற்பட்ட தேவனுடைய கோபம்
இ) நீங்கள் உலகத்தோடு ஒத்து கொள்ளாதபடியினால்
ஈ) உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய ஆவியும் ஆசீர்வாதமும் இல்லாத படியினால்

7. இயேசுவின் சிந்தையின் மாதிரிகளாக வாழ்பவர்களை இந்த உலகம் தாக்குகிறது என்று நீங்கள் ஏன் நினைக்கிறீர்கள்?

அ) இயேசுவின் மாதிரிகளாக இருப்பவர்கள், தாங்கள் மற்றவர்களைப் போல எப்படி இருந்திருக்க வேண்டுமோ அதற்கு மாறானதாக இருக்கிறார்கள்.
ஆ) இயேசுவின் சிந்தை இந்த உலகத்தின் கொள்கை கோட்பாடுகளுக்கும், கலாச்சாரத்திற்கும் ஒத்துப் போவதில்லை.
இ) இயேசுவின் சிந்தை சுயநீதியுள்ளவைகளாகவும் பிறரை குற்றப்படுத்துவதாகவும் உள்ளது.
ஈ) பாவமும் நீதியும் எப்போதும் ஒன்றுக்கொன்று எதிரானதாகவே உள்ளது.
உ) இயேசுவின் சிந்தைகள் சகித்து கொள்ள முடியாததாகவும் மற்றவர்களைக் குறித்து தப்பெண்ணம் கொண்டதாகவும் காணப்படுகிறது.

8. துன்பப்படும்போது வெளிப்படுகின்ற தெய்வீகமான செயல்களை கோடிட்டு காட்டவும்.

சந்தோஷம்	பகையுணர்ச்சி	பொறுமை
சமாதானம்	பழிக்குப் பழி	இரக்கம்
அன்பு	வாக்குவாதம்	தைரியம்
துதித்தல்	குற்றஞ்சாட்டுதல்	கோபம்

கடந்த கால வரலாற்றின்படி, துன்புறுத்துதல் சபையை பலப்படுத்தியுள்ளதா அல்லது பலவீனப்படுத்தியுள்ளதா?
.... ஏன்?
....
....

துன்பப்படும்போது உங்கள் இயற்கையான பதில் நடவடிக்கை என்ன?
....

நீங்கள் துன்பப்படும்போது தேவனின் குணாதிசயங்களை நிரூபித்து காட்ட முடியுமா? எப்படி?
....

கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 9

பாக்கியங்கள் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை வருகின்ற பாக்கியங்கள் மற்றும் செல்கின்ற பாக்கியங்கள் என்பதாகும். மேலும் நான்கு ஈரடி செய்யுளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. வருகின்ற சிந்தைகள் தேவனை நோக்கி செல்வதையும், தேவனோடு நமக்குள்ள தனிப்பட்ட உறவையும் உட்படுத்தியதாக இருக்கின்றது. செல்லுகின்ற சிந்தைகள் என்பது கிறிஸ்துவின் சிந்தைகளை, நமக்கு மக்களோடு கூட உள்ள உறவில் செயல்படுத்துவதை உட்படுத்தியதாக உள்ளது.

முதலாவது ஈரடிச் செய்யுள் - ஆவியில் எளிமை மற்றும் துயரம் - இதன் ஆவிக்குரிய இரகசியம் என்னவென்றால்: "என்னால் செய்ய முடிந்தது என்ன என்பதல்ல, அவரால் என்ன செய்ய முடியும் என்பதாகும்."

இரண்டாவது ஈரடிச் செய்யுள் - சாந்த குணம் மற்றும் நீதியின் மேல் பசிதாகம் - ஆவிக்குரிய இந்த இரகசியம் குறிப்பிடுவது என்னவென்றால், "என்னுடைய விருப்பம் என்ன என்பதல்ல, அவர் என்ன விரும்புகிறார் என்பதாகும்."

மூன்றாவது ஈரடிச் செய்யுள் இருதய சுத்தத்தோடு கூடிய இரக்கம் - இந்த ஆவிக்குரிய இரகசியம் குறிப்பிடுவது என்னவென்றால், "நான் யார் அல்லது நான் எப்படிபட்டவன் என்பதல்ல அவர் யார், அவர் எப்படிப்பட்டவர் என்பதாகும்."

நான்காவது ஈரடிச் செய்யுள் - சமாதானம் பண்ணுகிறவர்கள், நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் - தேவன் நம்மை உபயோகிக்கும்போது நாம் எதை அறிக்கையிட வேண்டும் என்பதை குறிப்பிடுகிறது: "நான் என்ன செய்தேன் என்பதல்ல, ஆனால் அவர் என்ன செய்தார் என்பதே."

ஒவ்வொரு ஈரடிச் செய்யுளுடனும் இணைக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய உள் அர்த்தத்தை வாசிக்கவும். எது உங்களுக்கு புரிந்து கொள்ளவும் நடைமுறைப்படுத்தவும் இலகுவானதாக உள்ளது? எது மிகவும் கடினமானது? தேவன் விரும்புவது என்ன, அவரால் செய்யகூடியது என்ன, உங்களுடைய சொந்த எண்ணத்தைக் காட்டிலும் அவருடைய சித்தம் என்ன என்பதைக் குறித்தே உங்களை ஒருமுகப்படுத்த தேவன் உங்களுக்கு உதவி செய்யும்படி அவரிடம் கேளுங்கள்.

மலைப் பிரசங்கம்
பாடம் 3
மத்தேயு 5:13-16
கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 10
வேலிக்கம்பத்தின்மேல் கடல் ஆமை

நோக்கம்: இன்றைய கலாச்சாரத்தில் கிறிஸ்தவர்களின் பங்கு என்னவென்பதை, இயேசு தன்னுடைய சீடர்களுக்கு விளக்கிக் கூறிய நான்கு உவமைகள் மூலமாக புரிந்து கொள்ளலாம்.



"நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப் போனால் எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது. நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது. விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது.
மத்தேயு 5:13-16

மலைப் பிரசங்கத்திலே, பாக்கியங்களே இயேசுவினுடைய மலைப்பிரசங்கத்தின் சாரமாகவும் முக்கியமான பகுதியாகவும் இருந்தது. இந்த எட்டு பாக்கியங்கங்களின் மூலமாக, உலகத்தை மாற்றக் கூடிய ஒரு தேவ குணாதிசயத்தை விளக்கி கூறுகின்றார். அடுத்த பகுதியில், தன்னுடைய பிரசங்கத்தைக் குறித்து வியாக்கியானமும் செயல்முறை விளக்கமும் கூறுகின்றார். பிற மதத்தினரிடையே அல்லது மத நம்பிக்கையற்ற இடத்திலே கிறிஸ்துவைப் போன்ற குணநலன்கள் வெளிப்படும்போது இந்த வேறுபாடு மிகவும் தெளிவாக தெரிகின்றது. உலகப்பிரகாரமான சிந்தைக்கும், இயேசுவின் சிந்தைக்கும் உள்ள வேறுபாட்டை மக்கள் அறிந்து கொள்வதோடு, அவ்விதமான சிந்தைகள் நமக்குள்ளாக இருந்து வெளிப்படுவதில்லை என்பதையும் அறிந்து கொள்கிறார்கள். வேலிக்கம்பத்தில் கடல் ஆமை இருந்தால், அது தானாக அந்த இடத்திற்கு ஏறிச் செல்லவில்லை என்பதை நீங்கள் அறிந்து கொள்வது போல, கிறிஸ்துவின் சிந்தைகளை நம்மில் காணும்போது, நாமாகவே அவைகளை வளர்த்துக் கொள்ளவில்லை என்பதையும் புரிந்து கொள்ள முடியும். அதேப்போல கிறிஸ்துவைப் பின்பற்றுபவர் என்று அதிகாரபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஒவ்வொருவரும் தன்னை வேலிக்கம்பத்தின் மேல் அமர்ந்திருக்கின்ற கடல் ஆமை போலவே எண்ணிக் கொள்ள வேண்டும். நாம் யாவரும் நம்மைச் சுற்றிலும் நோட்டமிட்டுப் பார்த்து, இந்த உலகத்திலே நாம் எந்த இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை தெளிவாக புரிந்து கொண்டு, "கிறிஸ்து என்னை இந்த இடத்தில் வைக்கவில்லை என்றால், நான் இந்த இடத்திற்கு வந்திருக்க முடியாது" என்று வேலிக் கம்பத்தின் மேலுள்ள கடல் ஆமையைப் போல ஆச்சரியப்படுவோம்.

செல்லுகின்ற, வருகின்ற பாக்கியங்களைக் குறித்து இயேசு கூறியபின்பு, உலகத்திற்காக கிறிஸ்தவர்கள் தங்களை தேவனுடைய செயலின் ஒரு பகுதியாக ஒப்படைக்கும் போது என்ன நடக்கும் என்பதை நான்கு வல்லமையான உவமைகள் மூலமாக, விளக்கமாக கூறுகின்றார். விசுவாசிகள், பூமிக்கு உப்பாகவும், உலகத்திற்கு ஒளியாகவும், விளக்குத் தண்டின்மேல் வைக்கப்பட்ட விளக்காகவும், மலையின் மேலிருக்கிற பட்டணமாகவும் மாறுகிறார்கள்.



பூமிக்கு உப்பு

அழுகிக் கொண்டிருக்கிற கெட்டுப்போன இறைச்சியைப் போன்று மலையின் அடிவாரத்தில் கூடி வந்திருக்கின்ற மக்களும் உலகத்தின் ஒரு பகுதியினர். இறைச்சி கெட்டுப்போகாமல் உப்பு அதனை பதப்படுத்துவது போல இயேசுவின் சிந்தைகளைக் கொண்ட கிறிஸ்தவர்களும் பூமிக்கு உப்பாய் இருக்கிறார்கள். இறைச்சியின் மீது உப்பு தேய்க்கப்படுவது போல, கிறிஸ்துவின் சிந்தை கொண்ட சீடர்கள் உலக மக்களோடு கலக்கும் போது, அவர்களுடைய செயல்களினால் உலகம் முழுவதும் நேர்மையற்ற தன்மையினால் பாதிப்படையாதபடி காத்துக் கொள்ளப்படும். இந்த கலாச்சாரத்தை மாற்றி அமைக்க இயேசு உபயோகிக்கும் முக்கியமான பொருளாக அவர்கள் மாறுவார்கள்.

1. மத்தேயு 15:13வது வசனத்தில் நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள் என்று கூறுகின்றார்.
2. சரியா? தவறா?: கிறிஸ்தவர்கள் தங்களை தனிமைப்படுத்தி, உப்பு ஜாடிக்குள்ளேயே இருப்பார்களென்றால், கிறிஸ்தவர்கள் தங்கள் செல்வாக்கை பயன்படுத்த முடியாது.
3. சரியா? தவறா?: பாரம்பரிய பழக்க வழக்கங்களை மாற்ற இயேசு இந்த உலகத்திற்கு வந்தார்.
4. சரியானவற்றை கோடிட்டு காண்பிக்கவும். உப்பின் என்னென்ன பயன்களை மனதில் கொண்டு அவர் உப்பு உவமானத்தை கூறினார்?
   அ) பதப்படுத்த பயன்படும் பொருளாக
   ஆ) பணத்திற்கான மாற்று பொருளாக

   இ) புண்களில் எரிச்சலுண்டாக்குகிற பொருளாக
   ஈ) தாகம் ஏற்படுத்தக் கூடிய ஒன்றாக
   உ) சுத்தப்படுத்தும் பொருளாக
   ஊ) சுகப்படுத்தும் பொருளாக
5. "உப்பாக" நமது பங்கு எப்போது மிகவும் சிறப்பு வாய்ந்ததாக இருக்கும்?
   அ) நமது வேதாகமத்தை நாம் வாசிக்கும்போது
   ஆ) ஆலயத்திற்கு நாம் செல்லும்போது
   இ) மற்ற மக்களோடுள்ள நம்முடைய உறவில்
   ஈ) மற்ற விசுவாசிகளுடனான நமது உறவில்
6. கலாச்சாரத்தை மாற்ற இயேசு உபயோகித்த முறை
   அ) புதிய கட்டளைகளை கொடுப்பது
   ஆ) விசுவாசிகளின் இதயத்தை மாற்றி அவர்களை உலகத்திற்குள் அனுப்புவது
   இ) அரசாங்கத்தை மாற்றி அமைப்பது
   ஈ) மக்களுக்கு அதிக கல்வியைக் கொடுப்பது
7. யோவான் 17:15 வாசிக்கவும். இயேசு, தன்னுடைய சீடர்கள் உலகத்தினின்று தனிமைப்பட்டு இருக்க வேண்டுமென்று விரும்பினாரா? அல்லது உலகத்தோடு ஈடுபட வேண்டுமென்று விரும்பினாரா?
8. கீழே குறிப்பிட்டுள்ளவைகளில் உங்களுடைய எந்தெந்த கலாச்சாரங்களில் கிறிஸ்தவ ஈடுபாடு வேண்டுமென்று எண்ணுகின்றீர்களோ அவற்றை கோடிடவும்.

ஒழுக்கத்தின் தரம்	வர்த்தகம் பொருளாதாரம்
திருமணம்	அரசாங்கம்
குடும்ப உறவுகள்	சமூக உறவுகள்
மதம்	கல்வி
பொழுதுபோக்கு	கலாச்சாரம்

9. மேலே குறிப்பிட்டவைகளில் எந்தெந்த பகுதிகளில் நீங்கள் நேரடியாக உப்பாக செயல்பட முடியும் என்பதை கோடிட்டு காட்டவும்.

உங்கள் சமுதாயத்தில் நீங்கள் எவ்விதமாக செயலூக்கமுடைய சாரமுள்ள உப்பாக செயலாற்ற முடியும் என்பதற்கான முக்கிய குறிப்புகளைக் கூறவும்.
....
....
....

உலகத்திற்கு ஒளி

இருளில் வாழ்கின்ற திரளான ஜனங்களுக்கு கிறிஸ்தவர்கள் மாத்திரமே ஒளியாக விளங்க முடியும் என்பதை இரண்டாவது உவமானம் குறிப்பிடுகின்றது. முதலாவது உவமானத்தின்படி இயேசு கூறியவற்றின் மூல வார்த்தைகளின் மொழி பெயர்ப்பு, "நீங்கள், நீங்கள் மாத்திரமே" உப்பாகவும் ஒளியாகவும் இருக்கிறீர்கள் என்று கூறுகின்றது. அவருடைய சீடர்கள் உப்பாகவும், ஒளியாகவும் தங்கள் பங்கை நிறைவேற்றவில்லை என்றால், வேறு எவரும் அதனை நிறைவேற்ற முடியாது. இயேசுவின் சிந்தையைக் கொண்ட மக்கள், பிரகாசிப்பதினால், கர்த்தரின் செயல் செய்யும்படியாக இந்த உலகத்திற்குள் அனைவரும் பார்க்கும்படியாக அனுப்பப்படுகிறார்கள்.

1. மத்தேயு 5:14 வது வசனத்தில் "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என்றும் 16 வது வசனத்தில் "இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும் படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" என்றும் இயேசு கூறுகின்றார்.

2. சரியா? தவறா?: உலகம் இருளாக இருப்பதினால் நீங்கள் தான் ஒளியாக இருக்க வேண்டுமென்று இயேசு தன்னுடைய சீடர்களிடம் கூறினார்.

3. சரியா? தவறா?: இருளில் இருக்கின்ற மெழுகுவர்த்தி தன்னில் தானே பயனற்றதாக இருக்கின்றது. அதனை பிரகாசிக்கச் செய்ய யாராவது வேண்டும்.
கீழே கேட்கப்பட்ட கேள்விகளின் சரியான பதிலை கோடிட்டு காட்டவும்.

4. மத்தேயு 9:36 வது வசனத்தை வாசிக்கவும். இந்த வசனத்தின்படி, தான் ஊழியம் செய்த இடத்திலுள்ள மக்களைக் குறித்து இயேசு என்ன நினைத்தார்?
   அ) அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போல் இருப்பதாக
   ஆ) அவர்கள் தங்களைத் குறித்து தாங்களே அக்கறை எடுத்து கொள்ளக் கூடியவர்களாக இருப்பதாக
   இ) அவர்களுக்கு உண்மை ஏற்கனவே தெரியும்.
   ஈ) அவர்கள் தொலைந்து போகவில்லை. எனவே எந்த உதவியும் தேவை இல்லை.

5. யோவான் 17:14 வாசிக்கவும். இந்த வசனத்தின்படி இயேசுவின் சீடர்கள் எவ்விதமாக உலகத்தினின்று வேறுபட்டிருக்கிறார்கள்?
   அ) அவர்கள் சிறந்த மக்கள்
   ஆ) அவர்கள் திறமை மிக்கவர்கள்
   இ) அவருடைய வார்த்தை அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.
   ஈ) அவர்கள் எவ்விதத்திலும் வேறுபட்டவர்களல்ல

6. உலகத்திற்கு ஒளியாயிருப்பது என்பதின் அர்த்தம் என்னவென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?
   அ) கர்த்தருடைய வார்த்தையை பகிர்ந்து கொள்ள வேண்டும்.
   ஆ) சுத்தமான நோக்கத்துடன் நல்ல காரியங்களை செய்ய வேண்டும்.
   இ) உங்களுடைய நீதியை வெளிக்காட்ட வேண்டும்.
   ஈ) உங்களை நோக்கி அனைவரது கவனத்தையும் ஈர்க்க வேண்டும்.
   உ) கர்த்தரைப் போன்ற மனப்பான்மை வேண்டும்.
   ஊ) பிறரிடம் அன்பு செலுத்த வேண்டும்

7. நமது ஒளியின் பிறப்பிடம் எது?
   அ) நம்முடைய நல்ல செயல்கள்
   ஆ) பிற விசுவாசிகள்
   இ) நமது உள்ளான தகுதிகள்
   ஈ) இயேசு நம்மில் ஜீவிப்பது

உங்கள் வாழ்க்கை கர்த்தரால் மாத்திரமே உருவாக்கப்பட்டது என்று விவரித்து கூற முடியுமா? ஆம்/இல்லை. இல்லை என்றால் உன்னுடைய வாழ்க்கையில் கர்த்தர் தன்னுடைய வேலையைச் செயல்படுத்த என்னென்ன மாற்றங்களை நீ அனுமதிக்க வேண்டும்.?

....

விளக்குத் தண்டின்மேல் வைக்கப்பட்ட விளக்கு

மூன்றாவது உவமானம்தான் மிக ஆழமான அறிவு கொண்டது. "என்னுடைய சீடரில் ஒருவராக நீங்கள் மாறுவதற்கு முன்பாக, நீங்கள் ஒளியேற்றப்படாத விளக்காக இருந்தீர்கள். இப்போது, கிறிஸ்தவர்களாக மாறிய பின்பு உங்கள் விளக்கு ஏற்றப்பட்டுள்ளது. ஒவ்வொரு முறையும் நான் விளக்கை ஏற்றும்போது, மற்றவர்கள் பார்க்கும்படியாக அதனை விளக்கு தண்டின் மேல் வைக்கிறேன்" என்று இயேசு கூறுகின்றார்.

1. மத்தேயு 5:15 வது வசனத்தில் "விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல் விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்."
தெரிந்தெடு: (வேலிக் கம்பம், தரையில், மரக்காலால் மூடி வைக்காமல், விளக்குத் தண்டின் மேல்)

2. சரியா? தவறா?: மெழுகுவர்த்தி ஏற்றப்படாமல் - தீ பற்றவைக்காமல் அது தானாகவே ஒளி கொடுக்க முடியாது.

3. சரியா? தவறா?: இயேசு தன்னுடைய சீடர்கள், எரிந்து பிரகாசித்து இருளான இடங்களுக்கு ஒளியூட்ட வேண்டும் என்று விரும்பினார்.

4. சரியா? தவறா?: உப்பாகவும் ஒளியாகவும் வாழ்ந்த ஒருவருக்கு இயேசு ஒரு நல்ல உதாரணம் அல்ல.

5. யோவான் 15:16 வசனத்தை வாசிக்கவும். இந்த வசனத்தின்படி இயேசு எதற்காக சீடர்களை தெரிந்தெடுத்தார்.
   அ) தங்கள் சுயதொழிலை கவனிக்கும் படியாக
   ஆ) கிறிஸ்தவர்களோடு மாத்திரம் நட்பு கொள்ளும்படியாக
   இ) உலகத்தை நியாயந்தீர்க்கும்படியாக
   ஈ) போய் கனிகொடுக்கும்படியாக

6. போய் கனிகொடுக்கும்படி இயேசு தன்னுடைய சீடர்களை அழைத்தார் என்று வேதாகமம் கூறும்போது, "செயல்களை திறம்பட கையாளுதல்" என்ற கிரேக்க வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. அவருடைய சீடர்களில் ஒருவராக, நீங்கள் இப்போது இருக்கும் இடத்தில் செயல்களை திறம்பட கையாளும்படி தேவன் அந்த இடத்தில் உங்களை வைத்திருக்கிறார் என்பதை நீங்கள் எவ்விதமாக உணருகிறீர்கள்? சரியானவற்றை கோடிட்டு காட்டவும்.

மன நிறைவு	பயம்
நோக்கம்	நம்பிக்கை
பயனற்றது	தேவை
ஆயத்தமில்லாமல்	

உங்களுடைய வாழ்க்கை ஒரு கூடை அல்லது மரக்காலின் கீழ் அல்லது விளக்குத் தண்டின் மேல் எதின்மேல் இருப்பதாக உணருகிறீர்கள்?

....

....

தேவன் என்ன நோக்கத்திற்காக உங்களை இந்த இடத்தில் வைத்திருக்கிறார் என்பதை அறிந்து கொள்ள உதவி செய்யும்படி அவரிடம் கேளுங்கள்.

....

....

மலையின் மேலிருக்கிற பட்டணம்

இயேசுவின் சீடர்கள் உண்மையாகவே உப்பாகவும், உலகத்திற்கு ஒளியாகவும் இருப்பார்களென்றால், அந்த உண்மையை அவர்களால் மறைக்கவே முடியாது. வேதனை நிறைந்த இந்த உலகத்தில், பிரச்சனைகளின் தீர்வாக தேவனால் உபயோகப் படுத்தப்படுகிறவர்கள், வெளிப்படையாகவே பிரச்சனைகளின் தீர்வாக இருப்பார்கள். நேர்மையற்ற உலகத்தை தேவனின் நியாயத்தீர்ப்பிலிருந்து காப்பாற்றுவதற்கு இந்த ஒரு வழி மாத்திரமே உண்டு. அப்போதுதான் இருளில் இருக்கிற உலகம் அவருடைய இரட்சிப்பை கண்டு கொள்ள முடியும்.

1. மத்தேயு 5:14 வது வசனத்தில் இயேசு இவ்விதமாக கூறுகிறார், “மலையின் மேலிருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது.”

2. சரியா? தவறா?: இயேசுவின் இரகசிய சீடன் என்று ஒன்றும் இல்லை.

3. சரியா?தவறா?: இயேசு நமது செயல்களைக் காட்டிலும், நம் வார்த்தைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்.
கீழே கேட்கப்பட்ட கேள்விகளின் சரியான பதிலை கோடிட்டு காட்டவும்.

4. கிறிஸ்தவ சாட்சியைக் குறித்த நான்கு உவமைகளிலும், இயேசு முக்கியத்துவம் கொடுத்தது
அ) தன்னை பின்பற்றுகிறவர்கள் தங்கள் வாயினால் எதை பேச வேண்டும்
ஆ) தன்னை பின்பற்றுகிறவர்கள் தங்கள் மனதில் என்ன நினைக்கிறார்கள்
இ) தன்னை பின்பற்றுகிறவர்கள் தங்கள் கைகளினால் என்ன செய்கிறார்கள்
ஈ) தன்னை பின்பற்றுகிறவர்கள் எப்படி மாறியிருக்கிறார்கள்.

5. இயேசு கூறிய நான்கு உவமானங்களிலும் தன்னுடைய சீடர்கள் இவ்விதமாக பார்க்க வேண்டும் என்பதை வற்புறுத்துகிறார்.
அ) தங்களை சுற்றியுள்ள உலகத்தின் தேவைகளை
ஆ) தங்களுடைய பாவங்களை
இ) தங்களுடைய திறமைகளை
ஈ) தங்களுடைய தனித்தன்மையும் முக்கியத்துவமும்

6. கீழே கொடுக்கப்பட்டவைகளில் எது இயேசுவின் ஊழியத்திற்கு மிகவும் சரியாக பொருந்துகின்றது.
அ) அவர் எப்போதாவதுதான் ஜனக்கூட்டத்தில் கலந்திருப்பார்
ஆ) பாவிகளை விட்டு தூரமாகவே விலகியிருப்பார்.
இ) அவருடைய வார்த்தைகளும் வேலைகளும் வெளிப்படையாகவே இருந்தது.
ஈ) அவர் வீட்டில் தங்கி இருப்பதையே விரும்பினார்.

7. இயேசு தன்னுடைய சீடர்களில், தன்னைப் போன்ற சிந்தை கொண்டவர்கள், இயேசுவின் கண்ணுக்கு புலப்படுகிற தன்மை, வெளிப்படையான ஊழியம் ஆகியவற்றில் எது இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்?
அ) அவர்கள் வெளிப்படையான தன்மையும், சாட்சியும் உடையவர்களாய் இருக்க வேண்டும்.
ஆ) பிறரிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்ட வாழ்க்கை வாழ்பவர்கள்.
இ) அவர்கள் பாவிகளிடமிருந்தும் கூட்டத்திலிருந்தும் விலகியிருக்க வேண்டும்.
ஈ) அவர்கள் அதிக நேரத்தை பிற சமயத்தினரோடேயே செலவிடுவார்கள்.

மத்தேயு 5:13-16 வசனங்களின்படி இயேசுவின் ஒளியில் நீங்கள் உப்பாகவும் ஒளியாகவும் எப்படி செயல்பட வேண்டும் என்று இயேசு அழைப்பதாக நீங்கள் நினைக்கிறீர்கள்?
உங்களுடைய குடும்பத்தில்...
உங்களுடைய கிராமத்தில் அல்லது பட்டணத்தில்..
உங்களுடைய வேலையில் ....
உங்களுடைய பள்ளியில் ....

மலைப் பிரசங்கம்

பாடம் 4

மத்தேயு 5:17-48

கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 11

உறவுகளில் நீதி

தேவனுடைய செயல்களைச் செய்வது எப்படி என்பதை கற்று கொள்ளுதல் - பிறருடனான நமது உறவுகளிலே உப்பாகவும் ஒளியாகவும் இருப்பது.



நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். வானமும் பூமியும் ஒழிந்து போனாலும், நியாயப் பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால், இந்த கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோக ராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான். வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். *மத்தேயு 5:17-20*

இந்த வசனத்தில் இயேசு பழைய ஏற்பாட்டிற்கு புறம்பாக இருப்பதாக பலர் எண்ணுகிறார்கள், ஆனால் அவர் மதத் தலைவர்களின் போதனைக்குத் தான் எதிர்த்து நிற்கிறார்.

"நான் உங்களுக்கு போதிப்பது யாவும் தேவனுடைய வார்த்தையில் காணப்படுகிறது, ஆனால் நான் போதிப்பது இவ்வளவு காலமும் மதத் தலைவர்கள் போதித்ததற்கு முற்றிலும் எதிரானதாக இருக்கிறது." தொடர்ந்து வருகின்ற வசனங்களில், கட்டளைகளில் கொடுக்கப்பட்ட எழுத்துக்களுக்கும் - பரிசேயர்களின் போதனைக்கும், கட்டளைகளின் ஆத்மார்ந்த நோக்கத்திற்கும் - இயேசுவின் போதனைக்கும் உள்ள வேறுபாட்டை கூறுகின்றார். கட்டளைகள் வெளியரங்கமானதாக மாத்திரமல்ல, உள்ளானதாகவும்; செங்குத்தானதாக (தேவனுக்காக செய்யப்பட்டது) படுக்கை கோடாக இருப்பதை காட்டிலும் (பிறர் பார்க்கும்படியாக செய்யப்பட்டது) இருக்க வேண்டும் என்று இயேசு போதித்தார். மாய்மாலமானதாக இருப்பதை காட்டிலும் உண்மையானதாக இருக்க வேண்டும்.

1. மத்தேயு 5:17 வது வசனத்தில் இயேசு, கட்டளைகளையும் தீர்க்கதரிசிகளையும் குறித்து இவ்விதமாக கூறுகிறார்.
   அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்.
2. சரியா? தவறா?: பழைய ஏற்பாடு இனிமேல் பொருத்தமுடையதாக இருக்காது என்று இயேசு தன்னுடைய சீடர்களுக்கு போதித்தார்.
3. சரியா? தவறா?: பழைய ஏற்பாட்டு கட்டளைகளின் ஆவிக்குரிய அர்த்தம் ஆழமானதாகவும் மதத் தலைவர்கள் போதித்ததைக் காட்டிலும் ஒரு தனி மனிதனின் தனித் தன்மைக்குரியதாகவும் இருக்கிறது.
   கீழே கேட்கப்பட்ட கேள்விகளின் சரியான பதிலை கோடிட்டு காட்டவும்.
4. 2 கொரிந்தியர் 3:6 வசனங்களை வாசிக்கவும். இந்த வசனத்தின்படி எழுத்துக்கும் ஆவிக்குமுள்ள முக்கியமான வித்தியாசம் என்ன?
   அ) எந்த வித்தியாசமும் இல்லை. இரண்டும் ஒன்றே.
   ஆ) எழுத்து பின்பற்றுவதற்கு எளிதானது.
   இ) ஆவி, பாவத்தை மிகவும் கடுமையாக தண்டிப்பதில்லை
   ஈ) எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது.
5. மத்தேயு 5:20 இல் இயேசு கூறுகிறார் நம்முடைய நீதி
   அ) வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிருக்க வேண்டும்.
   ஆ) மதத் தலைவர்களின் நீதிக்கு பொருந்தியதாக இருக்க கூடாது.
   இ) இவைகள் தேவனுக்கு முக்கியமானதல்ல
   ஈ) எப்போதும் பழைய ஏற்பாட்டையே அடிப்படையாக கொண்டிருக்க வேண்டும் என்பதல்ல.
6. தேவனுடைய அன்பு என்னும் கண்ணாடி வழியாக கட்டளை கொடுக்கப்பட்டது
   அ) நியாயந்தீர்த்து பாவத்தை கண்டிப்பதற்காக
   ஆ) இன்னமும் சிறப்பாக செய்வதற்கு மக்களை ஊக்குவிப்பதற்காக
   இ) மக்களின் நன்நடத்தையை மேலும் சிறப்புற செய்வதற்காக
   ஈ) மதப் போதகர்கள் தங்களைக் குறித்து சிறப்பாக எண்ணிக் கொள்வதற்காக.
7. கீழே கொடுக்கப்பட்டவைகளில் மதத் தலைவர்கள் கட்டளைகளில் எந்தெந்த பகுதிகளில் தவறான அபிப்பிராயம் கொண்டவர்களாக இருந்தார்கள் என்பதை கோடிட்டு காட்டவும்.

வெளியரங்கமாக	செங்குத்தாக
வேதம் சார்ந்த	அந்தரங்கமாக
படுக்கை கோடாக	மாய்மாலமாக
உண்மையாக	சம்பிரதாயமான

8. மேலே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலில் கட்டளைகளைக் குறித்து இயேசுவின் அபிப்பிராயம் என்ன என்பதை எழுதவும்.

கட்டளைகளை குறித்த உன்னுடைய அபிப்பிராயத்திற்கும் தேவனுடைய வார்த்தைகளுக்கும் அல்லது உன்னுடைய அபிப்பிராயத்திற்கும் பரிசேயர் செய்தவைகளுக்கும் உள்ள ஒற்றுமைகள் ஏதேனும் கூற முடியுமா? ....அப்படியானால் அவைகள் எவை? நீ இயேசுவைப் போல மாறுவதற்கு என்ன செய்ய வேண்டும்?

....

....

உன்னுடைய சகோதரன்

கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 12

கொலை செய்யாதிருப்பதாக என்பதும், கொலை செய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும், பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத் தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்.

ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்கு குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்தவிட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து.

மத்தேயு 5:21-24

விசுவாசிகளுக்கு, உறுதியான, அன்பான உறவுகளை உருவாக்குவதும் பேணுவதும் கடினமானது என்று இயேசு போதித்தார். அவரைப் போல இரக்க சிந்தை கொண்டவர்கள் அதை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும்; ஆனால் அவ்விதமாக செய்யும்போது, அது நமது தனித் தியானத்திற்கு தடையாக இருக்க கூடாது. நமது “சகோதரர்கள்” என்று இயேசு கூறுகின்ற எவரிடமிருந்தும் நாம் ஒதுக்கப்பட்டவர்களாக இருக்க கூடாது.

1. மத்தேயு 5:22 இல் இயேசு இவ்விதமாக கூறுகின்றார், “தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்” (தெரிந்தெடு: நியாயத்தீர்ப்பு, இரக்க குணம், தாராள மனப்பான்மை, கோபம், அவநம்பிக்கை)
2. சரியா? தவறா?: நமக்கும் தேவனுக்குமுள்ள உறவு சரியாக இருக்கும் வரை, மற்றவர்களுக்கும் நமக்கும் உள்ள உறவு நன்றாக உள்ளதா என்பதைப் பற்றி அக்கறை இல்லை.

3. சரியா? தவறா?: மற்றவர்களுக்கும் நமக்குமிடையிலான உறவில் தேவையான ஒன்று நாம் அவர்கள் வேதனைப்படும்படி எந்த காரியமும் செய்யக் கூடாது என்பதாகும். நம் இதயத்தில் என்ன உணருகிறோம் என்பது முக்கியமல்ல.
4. இந்த பகுதி எந்த சூழ்நிலையை முக்கியமாக குறிப்பட்டு கூறுகிறது?
   அ) யாராவது ஒருவர் நம்மை குறை கூறும்போது
   ஆ) யாராவது ஒருவரை நாம் குறை கூறும்போது
5. மாற்கு 11:25 ஐ வாசிக்கவும். இந்த பகுதி எந்த சூழ்நிலையை குறிப்பாக கூறுகின்றது?
   அ) யாராவது ஒருவர் நம்மை குறை கூறும்போது
   ஆ) யாராவது ஒருவரை நாம் குறை கூறும்போது
6. சரியா? தவறா?: தேவனோடு நமக்கு சரியான உறவு இருக்க வேண்டுமென்றால், நம் சகோதர சகோதரிகளுக் கிடையிலான குறைகளை கிறிஸ்துவிற்குள் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று இயேசு கூறுகின்றார்.

உங்களுடைய உறவுகளைக் குறித்து சிந்தித்து பாருங்கள். உங்கள் ஆராதனை வேளைகளை தடை செய்கிற உறவுகள் உண்டா? .... அப்படியானால் அதனை நீக்குவதற்கு நீங்கள் என்னென்ன வழி முறைகளை கையாள்வீர்கள்?

....

எதிராளி

கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 13

எதிராளி உன்னை நியாயாதிபதியினிடத்தில் ஒப்புக் கொடாமலும், நியாயாதிபதி உன்னைச் சேவகனிடத்தில் ஒப்புக் கொடாமலும், நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலும் இருக்கும்படியாக, நீ உன் எதிராளியோடு வழியில் இருக்கும்போதே சீக்கிரமாய் அவனுடனே நல்மனம் பொருந்து பொருந்தாவிட்டால், நீ ஒரு காசும் குறைவின்றிக் கொடுத்துத் தீர்க்குமட்டும் அவ்விடத்திலிருந்து புறப்பட மாட்டாய் என்று, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.

மத்தேயு 5:25-26

போட்டிகள் நிறைந்த ஓர் உலகத்தில் நாம் வாழ்கின்றோம். சில சமயங்களில் போட்டியாளர்கள் அல்லது பகைவர்களோடு உள்ள நமது உறவு பகையாக மாறி, அவர்கள் நம்மீது வழக்கு தொடரவும் சிறையில் தள்ளவும் தீர்மானித்து விடுகிறார்கள். சமாதானம் பண்ணுகிறவர்களாக இருக்கின்ற சீடர்கள் கோபப்படுவதில்லை அல்லது தங்கள் பகைவர்கள் மீதும் கூட கோபப்படுவதில்லை. மாறாக அவர்கள் தாங்கள் ஒரு போதும் சண்டைக்கு காரணமானவர்களாக இருக்க கூடாது என்று தீர்மானித்திருக்கிறார்கள்.

1. மத்தேயு 5:25 இன்படி இயேசுவின் சீடர்கள் தங்கள் பகைவர்களுக்கு எவ்விதமாய் விடையளிக்க வேண்டும்.?
2. சரியா? தவறா?: ஒவ்வொருவரும் எப்போதும் தங்கள் தங்கள் வழியையே பின்பற்ற வேண்டும் என்று இயேசு எதிர்பார்க்கிறார்.
3. சரியா? தவறா?: உண்மையான சீடர்கள் ஒருபோதும் ஒருவரோடும் சண்டையிட மாட்டார்கள்.
   கீழே குறிப்பிட்டவைகளில் சரியான பதிலை கோடிட்டு காட்டவும்.

4. இயேசு பகைவர்களைக் குறித்து கற்பித்ததில் எந்த பாக்கியம் இதற்கு சரியாக பொருந்துகிறது.
   அ) துயரப்படுகிறவர்களைக் குறித்து கூறிய 2வது பாக்கியம்
   ஆ) சாந்தத்தை குறித்து கூறிய 3 வது பாக்கியம்
   இ) இரக்கத்தை குறித்து கூறிய 5 வது பாக்கியம்
   ஈ) சமாதானம் பண்ணுதலைக் குறித்து கூறிய 7 வது பாக்கியம்

5. ரோமர் 12:18 ஐ வாசிக்கவும். இந்த வசனத்தின்படி நமது பொறுப்பு என்ன?
   அ) எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருக்க வேண்டும்
   ஆ) நம்மை யாரும் குற்றஞ்சாட்டாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.
   இ) நாம் வேதனைப்படாதபடி காரியங்கள் நடக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.
   ஈ) மக்கள் நம்மை தவறான முறையில் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும்.

நீங்கள் யாருடனாவது சண்டை போட்டிருக்கிறீர்கள். அதற்கு காரணம் சிறிதளவே உங்களது குற்றமும் பெருமளவு அவர்கள் குற்றமுமாயிருக்கிறது. இயேசு உன்னை என்ன செய்ய சொல்லுவார் என்று நீ நினைக்கிறாய்?
....

பெண்கள்

விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று. உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்து போடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப் போவது உனக்கு நலமாயிருக்கும். உன் வலதுகை உனக்கு இடறலுண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்து போடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப் போவது உனக்கு நலமாயிருக்கும்.

மத்தேயு 5:27-30

இந்த போதனை எதிர்பாலரோடு எவ்விதமான உறவு வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை கூறுகிறது. மற்ற பாவங்களைப் போல இயேசு அதின் ஆதாரமாகிய இதயத்திற்கு செல்கிறார். நாம் உப்பாகவும் ஒளியாகவும் செயல்படுகிறவர்களாக இருக்க வேண்டுமென்று உண்மையாகவே விரும்பினால், நமது பாலிய இச்சைகளையும் எவ்விதமாக கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும் என்று கற்றுக் கொள்ள வேண்டும்.

1. மத்தேயு 5:28 இல் இயேசு, இச்சையோடு பார்க்கிற எவனும் விபசாரஞ் செய்தாயிற்று என்று கூறுகிறார்.

2. சரியா? தவறா?: இயேசு தன்னுடைய சீடர்கள் கண்களை பிடுங்கி போட்டு விடவும் கைகளை வெட்டி போட்டு விடவும் வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்.

3. சரியா? தவறா?: இச்சையை பேணி வளர்த்து, அசுத்தமான நினைவுகளோடு இரண்டாவது முறை பார்ப்பதற்கு முன்பாகவே பாலியல் பாவத்திலிருந்து வெற்றி அடைய முடியும்.

கீழே குறிப்பிட்டவைகளில் சரியான பதிலை கோடிட்டு காட்டவும்.

4. யாக்கோபு 1:13-15 வாசிக்கவும். இந்த பகுதியின்படி நம்முடைய வாழ்க்கையில் பாவத்திற்கு ஆரம்பம் எது?
   அ) கர்த்தர் நம்மை சோதிக்கிறார்
   ஆ) நமது சொந்த இச்சை
   இ) சோதனைகளை விதைக்கிறோம்
   ஈ) மரணம்

5. யாக்கோபு 1:13-15 வசனத்தின்படி பாவத்தின் முடிவு என்ன?
   அ) அதிருப்தி
   ஆ) தற்காலிக திருப்தி
   இ) தேவன் மறுப்பு தெரிவிப்பது
   ஈ) மரணம்

6. உன்னுடைய கண்களை பிடுங்கி போடு அல்லது கைகளை தறித்து போடு என்று இயேசு என்ன அர்த்தத்தில் கூறினார் என்று நீ எண்ணுகிறாய்.
   அ) ஆரம்பத்திலேயே சோதனைகளை விட்டு விலகி விட வேண்டும்.
   ஆ) நீ பாவம் செய்யாதவரை எந்த தவறும் இல்லை
   இ) உங்களுடைய விருப்பங்கள் யாவும் பொல்லாததே.
   ஈ) பாவம் செய்யாதபடி உங்களை நீங்களே வன்முறைக்குட்படுத்தி கொள்ளுங்கள்.

அநேகமாக நீங்கள் எவ்விதமான சோதனைகளினால் போராடுகிறீர்கள்? இப்போதிருப்பதைக் காட்டிலும் சோதனை ஏற்படுத்துகின்ற சூழ்நிலைகளை தவிர்க்க கூடிய வழிகளைக் குறித்து சிந்திக்க முடியுமா?
....

உன்னுடைய மனைவி

கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 13

தன் மனைவியைத் தள்ளி விடுகிற எவனும், தள்ளுதற்சீட்டை அவளுக்குக் கொடுக்கக் கடவன் என்று உரைக்கப்பட்டது. நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளி விடுகிறவன், அவளை விபசாரஞ் செய்ய பண்ணுகிறவனாயிருப்பான்; அப்படித் தள்ளி விடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான்.

மத்தேயு 5:31-32

இது மதத்தலைவர்களும் பரிசேயரும் மோசேயின் கட்டளைகளை மேற்கோள் காட்டியதற்கு ஓர் உதாரணம். ஆனால் இயேசு அவர்களுடைய விளக்கத்தை ஏற்று கொள்ளவில்லை. விவாகாரத்தும், கணவன் மனைவி பிரிந்து வாழ்தலும் இன்று பல கலாச்சாரங்களில் தொற்று நோய் போல் பரவி வருகிறது. விவாகாரத்து என்பது ஒருபோதும் திருமணத்தை குறித்து தேவனுடைய நோக்கமல்ல என்று இயேசு போதிக்கிறார்.

1. மத்தேயு 5:31-32 வது வசனத்தின்படி வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளி விடுகிறவன், அவளை விபசாரஞ் செய்யப் பண்ணுகிறவனாயிருப்பான்.
2. சரியா? தவறா?: விவாகாரத்து ஏற்றுக் கொள்ளக் கூடியது என்று இயேசு போதிக்கிறார்.

3. சரியா? தவறா?: விவாகாரத்து செய்வதற்கான காரணம் இருந்தாலும், தன்னுடைய சீடர்கள் இதிலும் நேர்மையுடையவர்களாய் இருக்க வேண்டும் என்று இயேசு போதிக்கிறார்.

4. சரியா? தவறா?: கணவன் மனைவிக்கு இடையிலான உறவுக்கும் பாக்கியங்கள் பொருந்தும்
கீழே குறிப்பிட்டவைகளில் சரியான பதிலை கோடிட்டு காட்டவும்.

5. எபேசியர் 5:31-32 வாசிக்கவும் இந்த பகுதியின்படி திருமணம்
   அ) ஒரு மனித இனத்திற்குரிய நிர்வாகம்
   ஆ) வசதியானதாகவும் செயல்முறையாகவும் உள்ளது
   இ) கிறிஸ்துவிற்கும் சபைக்குமான தெளிவான விளக்கம்.
   ஈ) சட்டத்திற்கும் கலாச்சாரத்திற்குமான காரணம் மாத்திரமே

6. உங்களுடைய எண்ணத்தின்படி, சமூகத்தில் உப்பாகவும் ஒளியாகவும் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை எவ்வாறு விவாகாரத்து வலுவற்றதாக்குகிறது.
   அ) நமது குழந்தைகளின் சிறப்புகளை எதிர்மாறான விளைவுக்குள்ளாக்குகிறது
   ஆ) இயேசுவின் சீடர்கள் என்பதிலிருந்து நம்மை தகுதியற்றவர்கள் ஆக்குகிறது.
   இ) கிறிஸ்துவும் சபையும் என்ற விளக்கத்தை பாழ்ப்படுத்துகிறது.
   ஈ) உலகத்திற்கு வேறு எந்த சிறப்பான வழியும் காட்டப்படவில்லை.
   உ) அது ஒரு மன்னிக்கப்பட முடியாத குற்றம்.

நமது கலாச்சாரம் விவாகாரத்தை குறித்து என்ன நினைக்கிறது? அது இயேசுவின் போதனையினின்று எவ்விதத்தில் மாறுபட்டு காணப்படுகிறது.
....
....

உன்னுடைய வார்த்தை

கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 14

அன்றியும் பொய்யாணையிடாமல், உன் ஆணைகளைக் கர்த்தர் முன்னிலையாய்ச் செலுத்துவாயாக என்று பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; பரிச்சேதம் சத்தியம் பண்ண வேண்டாம்; வானத்தின் பேரில் சத்தியம் பண்ண வேண்டாம், அது தேவனுடைய சிங்காசனம். பூமியின் பேரிலும் சத்தியம் பண்ண வேண்டாம், அது அவருடைய பாதபடி; எருசலேமின்பேரிலும் சத்தியம் பண்ண வேண்டாம், அது மகாராஜாவினுடைய நகரம். உன் சிரசின் பேரிலும் சத்தியம் பண்ண வேண்டாம், அதின் ஒரு மயிரையாவது வெண்மையாக்கவும் கறுப்பாக்கவும் உன்னால் கூடாதே. உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும். *மத்தேயு 5:33-37*

இயேசுவின் காலத்தில் வாழ்ந்த மதத்தலைவர்களின் மத்தியில் ஆணையிடுவதில், நிபந்தனைக்குட்பட்டது, நிபந்தனைக்குட்படாதது என்று இரண்டு விதமான பழக்கம் காணப்பட்டது. அது பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக என்ற கர்த்தரின் கட்டளையை மதிக்காத, குழப்பம் மிகுந்த அபத்தமானதாக காணப்பட்டது. தன்னுடைய சீடர்கள் கட்டளைகளுக்கும் தாங்கள் கொடுத்த வாக்கிற்கும் கட்டுப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

1. மத்தேயு 5:34, இயேசு, “பரிச்சேதம் சத்தியம் பண்ண வேண்டாம்” என்று கூறுகிறார்.

2. சரியா? தவறா?: இயேசு உண்மையும் நேர்மையும் அவருக்கு மிகவும் முக்கியமானது என்று கூறுகிறார்.

3. சரியா? தவறா?: இயேசு தன்னுடைய சீடர்கள் தங்களால் ஒன்றை செய்ய முடியவில்லை என்றால் அதனைக் குறித்து எவ்விதமான வாக்கும் கொடுக்க வேண்டாம் என்று எதிர்பார்க்கிறார்.

4. ஒருவர் உங்களுக்கு ஒரு வாக்கு கொடுத்து விட்டு அதனைக் குறித்து அக்கறை கொள்ளாமல் அந்த வாக்கை நிறைவேற்றவில்லை என்றால் நீங்கள் எவ்விதமாக உணருவீர்கள்?
   அ) அது என்னை எவ்விதத்திலும் தொல்லைபடுத்துவதில்லை; எப்போதும் மக்கள் அவ்விதம் தான் செய்கிறார்கள்.
   ஆ) அது எனக்கு தொல்லை தரும், ஆனால் நான் புரிந்து கொள்கிறேன். நானும் அவ்விதமாகவே செய்கிறேன்.
   இ) அது என்னை தொல்லை படுத்தும் ஏனென்றால் அது நேர்மையற்ற செயல்

நமது கலாச்சாரத்தின்படி நீதிக்கும் நேர்மைக்குமான தரம் எவைகள்? அவைகள் எப்படி இயேசுவின் தரத்திலிருந்து வேறுபடுகின்றது?
....

தீய மக்கள்

கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 15

கண்ணுக்குக்கண், பல்லுக்குப்பல் என்று உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு. உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டு விடு. ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம் பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ. உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு உன்னிடத்தில் கடன் வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே. *மத்தேயு 5:38-42*

தங்களுக்கு இழைக்கப்பட்ட தவற்றிற்காக பழிவாங்குவது, அவர்களால் இழைக்கப்பட்ட பழிவாங்குதலைக் காட்டிலும் கடுமையானதாக இருக்க வேண்டும் என்ற விருப்பமுடைய கடின இதயமுடைய மக்களுக்காக, மோசே பழைய ஏற்பாட்டில் “கண்ணுக்குக் கண் பல்லுக்குப் பல்” என்ற கட்டளையைக் கொடுத்தார். உதாரணமாக, ஒருவன் மற்றொருவனுடைய பல்லை உடைத்து விட்டால், வேதனையை அனுபவித்தவர் “உன்னுடைய கழுத்தை முறித்து விடுவேன்” என்று கூறுவான். மோசேயினுடைய கட்டளை பழிக்கு பழி வாங்காமல் நீதி வழங்கியது. ஆனால் இயேசு நீதியையும் கடந்து, எப்போதும் கட்டளையின் ஆத்மார்ந்த கருத்தாகிய இரக்கத்தை சிநேகித்தார்.

1. மத்தேயு 5:39 வசனத்தின்படி இயேசு எதை எதிர்த்து நிற்க வேண்டாம் என்று கூறுகிறார்?

2. சரியா? தவறா?: நம்மிடத்திலிருந்து மற்றவர்கள் விரும்புகின்ற எதையும் எடுத்துக்கொள்ள நாம் அனுமதிக்க வேண்டும் என்று இயேசு எதிர்பார்க்கிறார்.

3. சரியா? தவறா?: இயேசு போதிக்கும்போது அவர் கட்டளையின் ஆத்மார்ந்த அர்த்தத்தை உண்மை அல்ல என்று மறுத்து போதித்தார்.
கீழே குறிப்பிட்டவைகளில் சரியான பதிலை கோடிட்டு காட்டவும்.

4. போட்டி நிறைந்த உலகத்தில் வாழ்கின்ற மக்களுக்கு இயேசுவின் போதனைகள் எவ்விதத்தில் பொருந்தும்.
   அ) நாமும் அவ்விதமான போட்டி மனப்பான்மையுடன் இருக்க வேண்டுமென்று கூறுகிறது.
   ஆ) நாம் வேறு விதமாக சமாதானம் பண்ணுகிறவர்களாக இருக்க வேண்டுமென்று கூறுகிறது.
   இ) நேர்மையாக எல்லாவற்றையும் சிறப்பாக செய்ய வேண்டுமென்று கூறுகிறது.
   ஈ) எப்போதும் தீய மக்கள் தங்கள் வழியிலேயே செல்ல விட்டு விட வேண்டுமென்று கூறுகிறது.

5. இந்த போதனையை அப்படியே ஏற்றுக் கொண்ட சீடர்களுக்கு மக்கள் எவ்விதமாக பதில் கொடுப்பார்கள் என்று நீ நினைக்கிறாய்? (பதில்கள் வேறுபடும்)
   அ) அவர்கள் பெரும் திகைப்படைவார்கள், மனந்திரும்புவார்கள்
   ஆ) அவர்கள் சிரிப்பார்கள்
   இ) நாம் கூர்ந்த அறிவுடையவர்கள் அல்ல என்று எண்ணுவார்கள்.
   ஈ) நமது தாராள மனப்பான்மையை அவர்கள் தங்களுக்கு ஏற்ற சூழ்நிலையாக எடுத்து கொள்வார்கள்.
   உ) நம்மைப் பார்த்து ஆச்சரியப்படுவார்கள், ஆனால் நடைமுறை வாழ்க்கைக்கு ஒவ்வாதவர்கள் என்று நினைப்பார்கள்.

பழிக்குப் பழி வாங்குதலை நமது கலாச்சாரம் எவ்விதமாக ஏற்றுக் கொள்கிறது? இது சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகிறதா?
....

இயேசுவின் போதனையின்படி இரக்கமாகவும், தாராள மனப்பான்மையுடன் வாழ்ந்தால், அதன் விளைவு உன்னைச் சுற்றி இருக்கிற மக்களின் மீது எப்படியிருக்கிறது?
....

உன்னுடைய பகைவர்
கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 16

உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப் படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார். உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன?

ஆயக்காரரும் அப்படிச் செய்கிறார்கள் அல்லவா? ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள்.
மத்தேயு 5: 43-48

இயேசுவின் போதனைகளில் இந்த வசனங்கள் தான் பொருளை விளக்குவதும் செயல்படுத்துவதும் கடினம். இந்த உலகம் ஒருபோதும் கேள்விப்பட்டிராத, ஒருவன் தன் வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய நன்னெறிக் கோட்பாடுகளை கற்று கொடுக்கிறது. உனக்கடுத்தவனை சிநேகித்து (செயல்படுகிறது) உன் சத்துருவை பகைப்பாயாக (செயல்படவில்லை) என்று இந்த கட்டளை கூறுவதாக மதத்தலைவர்கள் போதித்தார்கள். தவறாக பொருள் கொள்வதை இயேசு திருத்தி, தன்னுடைய சீடர்கள் பரிபூரணமாக தங்களை அர்ப்பணிக்கும்படி அழைத்தார். தேவனின் தரத்திற்கு ஏற்ப நமக்கடுத்தவர்களை சிநேகிப்பதும், நமது பகைவர்களை சிநேகிப்பதும் முடியாததாகும். இயேசு நம்மில் ஜீவிக்கிறார் என்ற ஒன்றே ஒன்றைத் தவிர.

1. மத்தேயு 5:44, இயேசு, உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள் உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள் என்று கூறுகின்றார்.

2. சரியா? தவறா?: வேத புத்தகம் ஒருபோதும் நமது பகைவர்களை வெறுக்கும்படி கூறவில்லை.

3. சரியா? தவறா?: மக்களை நேசிப்பதின் நோக்கம் நாம் தேவனுடைய புத்திரர் என்று அழைக்கப்படும்படியாகத்தான்.

4. சரியா? தவறா?: சுய பாதுகாப்பே இயேசுவின் சீடனைக் குறித்த மிக உயர்ந்த சித்தாந்தமாகும்.
கீழே குறிப்பிட்டவைகளில் சரியான பதிலை கோடிட்டு காட்டவும்.

5. லூக்கா 10:25-37. இந்த உவமையில் ஒரு சமாரியன் ஒரு யூதனுக்கு உதவி செய்வதில் குறிப்பிடத்தக்கது என்ன?
   அ) எதுவுமில்லை. எப்போதும் யூதர்களும் சமாரியர்களும் ஒருவருக்கொருவர் உதவி செய்வார்கள்.
   ஆ) யூதர்களும் சமாரியர்களும் ஒருவருக்கொருவர் பகைவர்கள்
   இ) யூதர்களும் சமாரியர்களும் வெவ்வேறு இடங்களில் வசிப்பதால் ஒருவரையொருவர் பார்க்ககூட மாட்டார்கள்.

6. லூக்கா 10:27,28 வசனங்களில் பிறனிடத்தில் அன்பு கூறுவாயாக என்று கூறும்போது, அவர் கூறியதின் பொருள் என்ன?
   அ) நம் பக்கத்தில் வசிக்கும் மக்கள்
   ஆ) நம்மைப் போலவே தோல் நிறமுடைய மக்கள்
   இ) நம் தரமுடைய மக்கள்
   ஈ) நமது நண்பர்கள்
   உ) ஒவ்வொருவரும்

7. கலாத்தியர் 2:20வாசிக்கவும், இந்த வசனங்களின்படி,நம்மை நேசிக்கிறவர்களையும், ஏன் நமது பகைவர்களையும் கூட நம்மை நேசிக்க செய்கின்ற வல்லமை எது?
   அ) நமது பாவத் தன்மைகள்
   ஆ) நமது இதயத்தின் விருப்பங்கள்
   இ) கர்த்தரின் கட்டளைகள்
   ஈ) இயேசு தாமே

8. பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள் (வச 48) என்று கூறும்போது அவர் கூறுவதின் பொருள் என்ன?
   அ) நாம் பாவமில்லாதவர்களாக மாற முடியும்
   ஆ) நாமும் பூரணமடைந்து தேவனைப் போல மாற முடியும்
   இ) தேவனைப் போல பரிசுத்தராகலாம்.

9. இயேசு தன்னுடைய சீடர்கள் இவ்விதமாக இருக்க வேண்டுமென்று விரும்பினார்
   அ) உலகத்தார் என்ன செய்கிறார்களோ அதையே செய்ய வேண்டும்.
   ஆ) சமூகத்தின் தரத்திற்கு ஒத்துப் போக வேண்டும்.
   இ) அவர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படுகிறதோ அதை செய்ய வேண்டும்.
   ஈ) அவர்களிடமிருந்து எதிர்பார்ப்பதைக் காட்டிலும் அதிகம் செய்ய வேண்டும்.

பிறருடனான உங்களுடைய உறவுமுறைகள் உங்கள் கலாச்சாரத்தை பிரதிபலிக்கின்றதாக இருக்கின்றதா? அல்லது கிறிஸ்துவை பிரதிபலிப்பதாக இருக்கின்றதா?

....

உங்களின் எவ்விதமான நடத்தை உங்களை பிற உலக மக்களினின்று உங்களை வேறுபடுத்தி காட்டுகின்றது

....

....

மலைப் பிரசங்கம்

பாடம் 5

மத்தேயு 6: 1-34

கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 17

ஆவிக்குரிய ஒழுக்கங்களும் செங்குத்தானவற்றின் மதிப்பும்

நோக்கம்: தேவனோடு உறவு கொள்வதற்கு, இயேசு தன்னுடைய சீடர்களுக்கு கற்றுக் கொடுத்த ஒழுக்கங்களை புரிந்து கொள்ளுதல்.

இயேசு தன்னுடைய சீடர்கள் பாக்கியத்திற்குரிய சிந்தைகளை தங்கள் இருதயங்களிலே வைத்து, அதனை தங்கள் அன்றாட வாழ்க்கையின் உறவு முறைகளில் பயன்படுத்தும்படியாக கற்று கொடுத்திருக்கிறார். மத்தேயு 6 வது அதிகாரத்தில், மற்றொரு கோணத்தில், தேவனோடு கூட உள்ள உறவினை பார்க்கும்படியாக கூறுகின்றார். குறிப்பட்ட ஆவிக்குரிய அல்லது செங்குத்தான ஒழுக்க முறைமைகளை பின்பற்றி, தாங்கள் எடுத்துக் கொண்ட தீர்மானத்தின்படி சீடர்களாக வாழ்வதற்குரிய தகுதியை காத்து கொள்ள வேண்டும்.

தர்மஞ் செய்யும்போது பின்பற்ற வேண்டிய ஆவிக்குரிய ஒழுக்கமுறைமைகள்.

மனுஷர் காண வேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; செய்தால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை. ஆகையால் நீ தர்மஞ் செய்யும்போது, மனுஷரால் புகழப்படுவதற்கு, மாயக்காரர் ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்வதுபோல, உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ தர்மஞ்

செய்யும்போது, உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக் கடவது. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய் பதிலளிப்பார். *மத்தேயு 6:1-4*

தன்னுடைய செயலை செய்ய விரும்புகிறவர்களிடத்தில் இயேசுவுக்கு தேவையான முதலாவது ஆவிக்குரிய ஒழுக்கம் - பூமிக்கு உப்பாகவும் உலகத்திற்கு ஒளியாகவும் - கண்காணியாய் இருப்பவர்களுக்கு தேவையான ஒழுக்கம். வேதாகமத்தின் அடிப்படையில் கண்காணியாய் இருப்பவர்கள் புரிந்து கொள்ளவேண்டியது, நமக்கு இருப்பவை அனைத்தும் (ஆரோக்கியம், திறமைகள், சொத்துக்கள், செல்வங்கள், குடும்ப உறவுகள், இன்னும் பல) தேவனுக்குரியவைகள். நாம் அவைகளை கண்காணிக்கும் மேலாளர்கள் மாத்திரமே. கண்காணிப்பின் மாதிரிகள் - நிர்வாகம்செய்தல் - தொண்டு மனப்பான்மையுடன் அந்தரங்கத்தில் செய்யப்படுகின்ற தர்மத்திற்கே இயேசு பலன் அளிக்கிறார் - படுக்கை கோடாக மக்களை தன் வசப்படுத்துகின்றதைக் காட்டிலும் செங்குத்து கோடாக தேவனை நோக்கி பிரதிபலிக்க வேண்டும். இயேசுவின் நாட்களில் வாழ்ந்த மதத் தலைவர்கள் தர்மம் செய்வது, மாய்மாலமானதாக காணப்பட்டது. மற்றவர்கள் பார்க்கும்படியாக தர்மம் செய்கிறவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்தாயிற்று என்று இயேசு சொல்லுகிறார்: அது, மனிதர்களிடமிருந்து வந்த புகழ்ச்சியான வார்த்தைகள். உண்மையான நீதி என்பது மனிதர்களை தன் வயப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் செய்யப்படுவது அல்ல, அந்தரங்கத்தில் செய்யப்படுபவைகளுக்கு தேவன் வெளியரங்கமாய் பதிலளிக்கிறார்.

1. மத்தேயு 6: 4 இல் அந்தரங்கமாய் கொடுப்பவர்களுக்கு தேவன் பலனளிப்பார் என்று இயேசு சொல்லுகிறார்.

2. சரியா? தவறா?: பரிசேயர்கள், தாங்கள் எவ்வளவு உதார மனமுடையவர்கள் என்று மக்கள் பார்க்க வேண்டும் என்று விரும்பினார்கள்.

3. சரியா? தவறா?: உங்கள் வெளிச்சம் அவர்களுக்கு முன்பாக பிரகாசிக்க கடவது என்று இயேசு மத்தேயு 5:16 இல் கூறியதற்கு பரிசேயர்கள் ஒரு சிறந்த எடுத்துகாட்டு.
சரியானவற்றை கோடிட்டு காட்டவும்

4. ஏன் இயேசு, தன்னுடைய சீடர்களிடம் அவர்கள் வெளிச்சம் மனிதர் முன்பாக பிரகாசிக்க வேண்டும் என்று கூறிவிட்டு, பரிசேயர்கள் பிறர் பார்க்கும்படியாக சட்டதிட்டங்களை கடைபிடிப்பதை கண்டிக்கிறார்?
   அ) ஏனென்றால், தாங்கள் புகழப்பட வேண்டும் என்பதே பரிசேயர்களின் நோக்கமாக இருந்தது.
   ஆ) ஏனென்றால் பரிசேயர்களுக்கு கிடைக்கின்ற மரியாதையைப் பார்த்து இயேசு பொறாமைப்பட்டார்.
   இ) ஏனென்றால் பரிசேயர்கள் தங்கள் சுய நீதியின்படி நடந்தார்கள். சீடர்கள் தங்களுக்குள்ளாக இருக்கும் தேவனின் ஆவியைக் கொண்டு நடந்தார்கள்.
   ஈ) ஏனென்றால் இயேசு இரண்டு விதமான தரங்கள் வைத்திருந்தார்.

5. ஏன் இயேசு தன்னுடைய சீடர்களிடம் அந்தரங்கமாய் தர்மம் செய்யும்படிகூறினார்?
   அ) தாங்கள் தர்மம் செய்வதின் நோக்கம் பரிசுத்தமானதாக இருக்க வேண்டும் என்பதற்காக
   ஆ) தாங்கள் எவ்வளவு குறைவாக கொடுக்க முடியும் என்பதைக் குறித்து அவர்கள் மனதில் குழப்பமடையாதபடி
   இ) ஏனென்றால், தாங்கள் எவ்வளவு உதாரத்துவமாய் கொடுக்கிறார்கள் என்று அவருடைய கவனம் அவர்களை நோக்கி இழுக்கப்படுவதை இயேசு விரும்பவில்லை.
   ஈ) ஏனென்றால் தேவன் அவர்களுக்கு பதிலளிக்கும்படியாக

6. சரியா? தவறா?: இன்று, பரிசேயர்களைப் போல தாங்கள் செய்கின்ற நல்ல காரியங்களினால் பிறர் கவனத்தை கவர வேண்டும் என்ற பிரச்சனை ஒருவரிடமும் இல்லை.

நீங்கள் எப்போதாவது தேவனுக்கு கொடுப்பதை பிறர் பார்த்து பாராட்ட வேண்டும் என்று இரகசியமாக விரும்பியதுண்டா? அப்படியென்றால், அதன் பின்பு நீங்கள் எவ்விதமான உணர்வடைந்தீர்கள்?

....

....

ஜெபத்திற்கான ஆவிக்குரிய ஒழுக்கம்

கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 18

அன்றியும் நீ ஜெபம் பண்ணும்போது மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம்; மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள்தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்.அன்றியும் நீங்கள் ஜெபம் பண்ணும்போது, அஞ்ஞானிகளைப் போல வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள். அவர்களைப் போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார். நீங்கள் ஜெபம் பண்ண வேண்டிய விதமாவது:

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள்பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.
உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே
செய்யப்படுகிறது போலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக.
எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.
எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்கை
எங்களுக்கு மன்னியும்.
எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்
கொள்ளும், ராஜ்யமும் வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும்
உம்முடையவைகளே, ஆமென், என்பதே.

மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரம பிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள்தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்.

மத்தேயு 6:5-15

இது எப்போதும் "கர்த்தருடைய ஜெபம்" என்று அழைக்கப்படுகிறது. ஆனால் இது "சீடர்களுடைய ஜெபம்" என்று அழைக்கப்பட வேண்டும். ஏனென்றால் இயேசு ஒருபோதும் இவ்விதமாக ஜெபிக்கவில்லை. இயேசு, நீங்கள் இவ்விதமாக ஜெபிக்க வேண்டும் என்றுதான் கூறுகின்றார். தேவன் ஒருவர் தவிர மற்ற எவரும் மனதில் ஆழமாக பதிய முடியாத, அந்த இடத்தில் கதவுகளைப் பூட்டி தனிமையாக, ஜெபிக்கும்படியாக கூறுகின்றார்.

இந்த மாதிரி ஜெபத்தில் தேவ சித்தத்திற்குட்பட்ட விண்ணப்பங்கள், தேவனுடைய அக்கறையை முதன்மையாக கொண்ட ஜெப விண்ணப்பங்கள் உள்ளது. இதில் தனிப்பட்ட விண்ணப்பங்கள், சீடர்களின் தேவைகளைக் குறித்த ஜெப வேண்டுதல்களும் உண்டு. இது முதலாவது தேவன் என்ற வேதாகமத்தின் செய்தியை சீராக ஒத்து வருகின்றது. இதை நாம் செய்யும்போது, கடைக்கு செல்லும்போது கொண்டு செல்கின்ற பொருட்களின் பட்டியலைப் போன்று ஒரு பட்டியலை தேவனிடம் கொண்டு சென்று அவர் நமக்கு என்ன செய்வார் என்றில்லாமல், நாம் அவருக்காக என்ன செய்ய வேண்டும் என்று கேட்கிறவர்களாக இருப்போம். நமது சித்தத்தை அவருடைய சித்தத்தோடு இணைக்கும்போது, நமது தனிப்பட்ட விண்ணப்பங்களுக்கு அவர் பதில் கொடுக்கிறார்.

1. மத்தேயு 6:8 வது வசனம், உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்.
2. சரியா? தவறா?: அந்தரங்கமாய் ஜெபிக்க வேண்டும் என்று இயேசு கூறியபோது, அவர் நாம் ஒருபோதும் பொதுவான வழிபாட்டு ஆராதனைகளில் ஜெபம் பண்ணக் கூடாது என்று கூறுகின்றார்.
3. சரியா? தவறா?: நாம் எவ்விதமாக ஜெபம் பண்ண வேண்டும் என்பதற்கு மாதிரியாக இயேசு இந்த ஜெபத்தை கற்று கொடுத்தார்.
4. சரியா? தவறா?:எந்த விதமான ஜெபத்திலும், நாம் தேவனோடுபேசுகிறோமேயன்றி சுற்றிலும் இருக்கிற மக்களை வயப்படுத்துவதற்காக அல்ல என்பது நாம் நினைவில் வைக்க வேண்டிய முக்கியமான காரியமாகும்.
5. சரியா? தவறா?: தேவனைப் "பிதாவே"என்று கூப்பிடுவது இயேசுவின் சீடர்களுக்கு ஒரு புதிய அடிப்படை கருத்தாகும்.
6. கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலில் "தேவனை முதன்மையாக கொண்ட" தேவ சித்தத்திற்குட்பட்ட வேண்டுதல்களை கோடிட்டு காட்டவும். சீடர்களின் தனிப்பட்ட தேவைகளுக்கான வேண்டுதல்களுக்கு **x** அடையாளமிட்டுகாட்டவும்.
   உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக
   எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்
   எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.
   உமது சித்தம் செய்யப்படுவதாக
   தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்
   உமது ராஜ்ஜியம் வருவதாக
   எங்களை சோதனைக்குட்பட பண்ணாதேயும்.
7. தேவன் நமது"பிதா"என்பதை புரிந்து கொள்ளவேண்டியதின்முக்கியத்துவம் என்ன? சரியானவற்றை கோடிட்டு காட்டவும்
   அ) அவர் நம் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட தேவன் என்பதைக் காட்டுகிறது.
   ஆ) அவர் நமது வாழ்வில் அக்கறையுள்ளவர் என்பதைக் காட்டுகிறது.
   இ) நாம் அவரை ஒரு போதகர் மூலமாகத்தான் நெருங்க வேண்டுவதில்லை என்பதைக் காட்டுகிறது.
   ஈ) பழைய ஏற்பாட்டில் இவ்விதமாக எந்த இடத்திலும் காணப்படவில்லை.

8. தேவன் "பரமண்டலங்களில் இருக்கிறவர்" என்பதை புரிந்து கொள்ள வேண்டியதின் முக்கியத்துவம் என்ன?
   அ) அவர் கடவுள் தன்மையானவர் என்பதை காட்டுகிறது.
   ஆ) அவர் சர்வ வல்லமையுள்ள தேவன் என்பதைக் காட்டுகிறது.
   இ) ஒரு போதகர் மூலமாகத்தான் நாம் அவரை சென்றடைய வேண்டும் என்று பொருள்படும்.
   ஈ) நமது தேவன் மிகவும் உயர்ந்தவராக, எல்லாவற்றையும் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார் என்று பொருள்படும்.
   கீழே கொடுக்கப்பட்டுள்ளவைகளில் சரியானவற்றை கோடிட்டு காட்டவும்.
9. "உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" என்று ஜெபத்தில் நாம் சொல்லும்போது ...
   அ) சொல்லுவதற்கு தேவனுடைய நாமம் மிகவும் பரிசுத்தமானது
   ஆ) மக்கள் அவருடைய நாமத்தை போற்றி புகழும்படி நாம் வாழவிரும்புகிறோம்.
   இ) தேவனை எவ்விதமாக சொல்லி ஜெபம் செய்ய வேண்டும் என்பதற்காக
10. "உம்முடைய ராஜ்ஜியம் வருவதாக" என்று ஜெபத்தில் நாம் சொல்லும்போது ....
    அ) இயேசு திரும்பவும் வருவதற்கு நாம் ஆயத்தமாக இருக்கிறோம்.
    ஆ) உலகப்பிரகாரமான அரசாங்கத்தை தேவன் அப்புறப்படுத்தும்படியாக
    இ) நம்முடைய சுய ராஜ்ஜியத்தில் அல்லாமல் அவருடைய இராஜ்ஜியத்தில் இருக்க விரும்புகிறோம்.
11. மத்தேயு 23:39 வாசிக்கவும். இந்த வசனத்தில் சீடர்களுடைய ஜெபத்தின் எந்த விண்ணப்பத்தை இயேசு மாதிரியாக எடுத்துள்ளார்?
    அ) எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.
    ஆ) உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக.
    இ) தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்.
12. நமது அனுதின ஆகாரத்தை நாம் கேட்கும்படியாக இயேசு கூறியதின் அர்த்தம் .....
    அ) ஆகாரம் என்பது நமது அனைத்து தேவைகளையும் குறிக்கிறது.
    ஆ) ஆகாரத்தோடு நாம் திருப்தியடைந்து விட வேண்டும். வேறு எதையும் கேட்கக் கூடாது.
    இ) ஆவிக்குரிய மன்னா என்பது உவமானமாக ஆகாரம் என்று கூறப்பட்டுள்ளது.
13. ஆவிக்குரிய விண்ணப்பங்களின் பட்டியலில் இயேசு ஏன் மன்னிப்பை முதலாவதாக குறிப்பட்டுள்ளார்?
    அ) ஏனென்றால் அது தான் நமது முக்கியமான தேவையாகும்.
    ஆ) ஏனென்றால் அவருடைய சீடர்கள் குறிப்பாக தங்களுடைய பாவங்களைக் குறித்து குற்றவுணர்வுடையவர்களாய் இருந்தார்கள்.
    இ) ஏனென்றால் தேவன் மன்னிக்க தயங்குகிறவராகவும் நமது தேவைகளை குறித்து அவரிடம் பேசி இணங்க வைக்க வேண்டியதாயிருந்தது.
14. சரியான விடைகளை கோடிடவும். தவறான விடைகளை **x** குறியிடவும். நாம் தினமும் இந்த காரியங்களை கேட்க வேண்டும் என்று இயேசு கூறுகிறார்.

பாதுகாப்பு	மன்னிப்பு	அப்பம்
வழிநடத்துதல்	பணம்	சமாதானம்
சௌக்கியம்	தீமையினின்று இரட்சிப்பு	

15. தேவன் நம்மை சோதிக்கவில்லையென்றால் (யாக்கோபு 1:13), ஏன் இயேசுதன்னுடைய சீடர்களிடம் சோதனைக்குட்படாதபடிக்கு தேவனிடம் கேட்கும்படியாக கூற வேண்டும்.

அ) ஏனென்றால், தேவன் நம்மை சோதிக்கவில்லை என்றாலும், சோதிக்கப்படும் போது நாம் என்ன செய்கிறோம் என்பதை அவர் பார்க்க விரும்புகிறார்.

ஆ) ஏனென்றால் தேவன் திரும்பவுமாக நம்மை மன்னிக்க விரும்பவில்லை.

இ) நாம் பெலவீனராயிருக்கிறபடியாலும், நமதுமனித சுபாவம் பாவம் செய்ய சாதகமாயிருப்பதாலும்

16. தீமையினின்று எங்களை இரட்சித்து கொள்ளும் என்று நாம் ஜெபிக்கும்போது நாம் உண்மையாகவே தேவனிடம் கேட்பது

அ) இந்த உலகத்தினின்று எடுத்து கொள்ளும்

ஆ) சாத்தானை எதிர்த்து நிற்க அவருடைய பலத்தை பயன்படுத்த

இ) சோதனை மற்றும் பாவத்திலிருந்து நம்மை தற்காத்து கொள்ளும் தன்மையை பெற்று கொள்ள

17. சரியா? தவறா?: "சீடர்களுடைய ஜெபம்" தேவன் முதலாவது என்ற அறிவிப்புடன் முடிவடைகிறது.

தங்களுடைய ஜெபம் தேவனை முதன்மையாக கொண்டுள்ளதா? :
"சீடர்களுடைய ஜெபத்தில்" நீங்கள் அடிக்கடி கேட்கும் விண்ணப்பம் எது?
....
அந்த விண்ணப்பத்தைக் குறித்து இன்று சிறிது நேரம் செலவிடவும்.

உபவாசித்தலின் ஒழுக்கம்

கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 19

நீங்கள் உபவாசிக்கும்போது, மாயக்காரரைப் போல முகவாடலாய் இராதேயுங்கள்; அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும் பொருட்டாக, தங்கள் முகங்களை வாடப் பண்ணுகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ உபவாசிக்கும் போது, அந்த உபவாசம் மனுஷர்களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக, உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு. அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.

மத்தேயு 6:16-18

தர்மம் செய்வதும், ஜெபம் செய்வதும் பிறர் மனதில் நம்மைக் குறித்து ஆழமாக பதிய செய்யாமல், செங்குத்தாக தேவனுக்கு நேராக ஏறெடுக்கப்பட வேண்டும் என்பது போல உபவாசமும் இருக்க வேண்டும். மற்ற ஒழுக்கங்களைப் போலவே இதையும் தேவன் பார்த்து பலனளிக்கிறார்.

1. மத்தேயு 5:16, இயேசு தன்னுடைய சீடர்களிடம் உபவாசிக்கும்போது முகவாடலாய் இருக்க வேண்டாமென்று கூறுகின்றார்.
(தெரிந்தெடு:சுகவீனமாய், பரிசுத்தமாய், சந்தோஷமாய், முகவாடலாய்)

2. சரியா? தவறா?: "நீங்கள் உபவாசிக்கும்போது .... இராதேயுங்கள்"; "நீயோ உபவாசிக்கும்போது ....".

3. சரியா? தவறா?: தாங்கள் மற்றவர்களைக் காட்டிலும் அதிக பக்தியுள்ளவர்கள் என்று காண்பிக்கும் பொருட்டு பரிசேயர்கள் தாங்கள் உபவாசிப்பதை மக்கள் கவனிக்க வேண்டும் என்று விரும்பினார்கள்.

4. சரியா? தவறா?: மத்தேயு 17:21 இன்படி உபவாசம், ஜெபத்திற்கு அதிக வல்லமையைக் கொடுக்கும்.

5. சரியா? தவறா?: ஆவிக்குரிய காரியங்களில் ஒருமுகப்படவும் தேவனை முதன்மையாக வைக்கவும் உபவாசம் உதவி செய்யும்.

6. நாம் உபவாசிக்கும்போது நமது முகங்கள் எவ்விதமாக இருக்க வேண்டும் என்று இயேசு விரும்புகிறார்?

அ) வருத்தமாகவும் கருத்தூன்றியதாகவும்

ஆ) சோர்வாகவும் பசியால் வாடியதாகவும்

இ) மற்றெல்லாரைக் காட்டிலும் பக்தி வினயமாகவும்

ஈ) பிரகாசமாகவும் சந்தோஷமாகவும்

7. ஏன் இயேசு தன்னுடைய சீடர்கள் உபவாசிக்க வேண்டும் என்று கூறினார்?

அ) தேவனின் உதவியைப் பெற்று கொள்ளவும் அவர் நம்மை கவனிக்கும்படி செய்யவும்.

ஆ) சுய - ஒழுக்கத்தின் மாதிரியாக

இ) தங்களுடைய கவனத்தை தேவன்மேல் ஒருமுகப்படுத்த

ஈ) தேக சுகத்திற்காக

நீங்கள் எப்போதாவது தனிமையில் உபவாசித்திருக்கிறீர்களா? செங்குத்தாக தேவன் மேல் விசுவாசமுள்ளவர்களாக
....
....
....

ஒரு சீடனின் செங்குத்தான மதிப்புகள்

கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 20

பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்: பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும். கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்; இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்! இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக் கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான்; தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது.

மத்தேயு 6:19-24

மலையடிவாரத்திற்கு வந்திருக்கிற மக்களுக்கு பலவிதமான போராட்டங்கள் இருப்பதற்கான ஒரு காரணம் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் தவறான காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறவர்களாக காணப்படுகிறார்கள் என்று இயேசு தன்னுடைய சீடர்களுக்கு போதித்து கொண்டிருந்தார். சீடர்களில் தங்களுக்குள்ளாக சரியான சிந்தை கொண்டவர்கள் சரியானவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதினால் தான் அவர்கள் இந்த உலகத்தில் ஒரு உப்பாகவும் ஒளியாகவும் பிறரை தன்பால் ஈர்க்கிறவர்களாக திகழ்கிறார்கள். அவர்கள் அடிப்படையில் உலகப்பிரகாரமான பொக்கிஷங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், நித்தியத்திற்கடுத்த காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறவர்களாக காணப்படுகிறார்கள்.

1. மத்தேயு 6:20 வது வசனத்தில் இயேசு தன்னுடைய சீடர்களிடம் பரலோகத்திலே தங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வைக்கும்படி கூறினார்.
   (தெரிந்தெடு: வீடு, பரலோகம், வங்கி, ஆலயம்)

2. சரியா தவறா: நமது பொக்கிஷங்களுக்கும் நம் இருதயத்தின் நிலைக்கும் சம்பந்தம் இல்லை.

3. சரியா தவறா: நமக்கிருக்கும் மதிப்பும் நமது மனப்பான்மைகளும் நாம் ஒளி அல்லது இருள் ஆகியவற்றில் எதினால் நிரப்பப்பட்டிருக்கிறோம் என்பதை பிரதிபலிக்கும்.
   கீழே குறிப்பட்டவைகளில் சரியான பதிலை கோடிட்டு காட்டவும்.

4. சீடர்கள் உலகப்பிரகாரமான பொக்கிஷங்களை சேர்த்து வைப்பதில் தங்கள் ஆற்றலை செலவிட வேண்டாம் என்று இயேசு ஏன் கூறினார்?
   அ) ஏனெனில் பூலோகத்திலுள்ள பொருட்கள் முக்கியத்துவம வாய்ந்தவைகள் அல்ல.
   ஆ) ஏனெனில் பூலோகத்திலுள்ள பொருட்கள் படிப்படியாக குறைந்து போகும் அல்லது திருடப்பட்டு விடும்.
   இ) ஏனெனில் செல்வம் பாவத்தினாலானது.

5. ஒரு சீடன் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய முடியாது என்று கூறியபோது, அவர் தேவன் தவிர மற்றொரு எஜமானாக எதை குறிப்பிட்டார்?
   அ) அந்தஸ்து
   ஆ) செல்வம்
   இ) வேலை
   ஈ) குடும்பம்

6. கீழே குறிப்பிட்ட பட்டியலில் எந்த காரியங்கள் இயேசுவுக்கு ஊழியம் செய்யாதபடி உங்களை தடுக்கிறது?

கவலை	எதிர்கால திட்டங்கள்
அந்தஸ்து	குடும்ப உறவுகள்
கல்வி	உடைமைகள்
வேலையைக் குறித்த செயல்கள்	போதை பொருளுக்கு அடிமையாதல்

போதை போன்ற தீய பழக்கங்களுக்குஅடிமையாதல்
செல்வம் தகுதி ஆகியவற்றை குறித்த பேராவல்

இயேசு உங்கள் எஜமானராக இருக்கும் வரை அவர் அனுமதிக்காத ஏதேனும் செயல் அல்லது எண்ணம் மேலே குறிப்பிட்ட பட்டியலில் இருக்குமென்றால் அதனை குறிப்பிடமுடியுமா?

....

இவைகளில் ஒன்று தேவனுக்கும் உங்களுக்குமான தொடர்பிலிருந்து உங்களை திசை திருப்புமென்றால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

....

உப்பு மற்றும் ஒளியின் மதிப்புகள்

கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 21

ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப் படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா? ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? கவலைப் படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை; என்றாலும், சாலொமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன். அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்கு தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரம பிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். ஆகையால், நாளைக்காகக் கவலைப் படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காக கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்.

மத்தேயு 6:25-34

இந்த பகுதி கவலையைக் குறித்து துவங்கினாலும், உண்மையில் மதிப்பு அல்லது முக்கியத்துவம் என்பதை மையமாகக் கொண்டே போதிக்கிறது. இயேசுவின் சீடர்கள் ஒவ்வொருவரும்: "முக்கியத்துவ இலக்கு" உடையவர்களாய் அதின் மையத்தில் ஒரு வட்டம் தேவன் தங்கள் இருதயத்தை ஆளுகை செய்வதை குறிப்பதாக இருக்க வேண்டும். மையப்பகுதியை சுற்றிலும் உள்ள அனைத்தும் இராஜாதி இராஜா எதனை சரி என்று தெரிவிக்கிறாரோ அதற்கு முக்கியத்துவம் கொடுப்பதாக இருக்க வேண்டும். எவற்றைக் குறித்தெல்லாம் நாம் கவலைப்படும்படி ஈர்க்கப்படுகிறோமோ, அவையெல்லாம் நமது பரம பிதாவினால் நமக்கு கொடுக்கப்படும்.

1. மத்தேயு 6:33 வது வசனத்தில் முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடும்படி இயேசு கூறுகிறார்.

2. சரியா? தவறா?: இவைகளைக் குறித்து கவலைப்பட வேண்டாம் என்று இயேசு கூறுகின்ற காரியங்களை குறித்து நாம் கடினமாக முயற்சி செய்தால், அக்காரியங்கள் இல்லாமல் நம்மை அடக்கி கொள்ளலாம்.

3. சரியா? தவறா?: பறவைகளைப் போலவும் புல்லைப் போலவும் நாம் கவலையற்றவர்களாக இருக்கலாம் என்று இயேசு வாக்கு கொடுக்கிறார்.

4. கீழே கொடுக்கப்பட்ட பட்டியலில் நீங்கள் அதிகமாக கவலைப்படும்படியான காரியங்களை கோடிடவும்.

உணவு	உடை
பணம்	தங்குமிடம்
பானம்	வேலை
உறவுகள்	பள்ளைகள்
கணவன்/மனைவி	எதிர்காலத் திட்டங்கள்

5. மேற்குறிப்பிட்டவைகளில் எவைகள் தேவனுடைய வாக்குதத்தத்தில் அடங்கியுள்ளது?

மேற்குறிப்பிட்டவைகள் எல்லாம் எதனையும் ஒதுக்கி வைக்காமல் எல்லாவற்றையும் தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுவதற்காக உங்கள் வாழ்க்கையை முழுவதுமாக கொடுத்து வீட்டீர்களா?...

அப்படியில்லையென்றால், அவ்வாறு செய்ய உங்களை தடை செய்வது என்ன?
....

மலைப் பிரசங்கம்

பாடம் 6

மத்தேயு 7:1-27

கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 22

அழைப்பு

நோக்கம்: இயேசு கற்று கொடுத்தவைகளை நடைமுறை வாழ்க்கையில் செயல்படுத்தவும், உண்மையான சீடர்களுக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வேறுபாட்டை புரிந்து கொள்ளவும்.

சீடர்கள் தங்களைத் தாங்களே நன்றாக உணர்ந்து, இயேசு கொடுத்த எட்டு பாக்கியங்களும், இந்த உலகத்திற்கு தேவையான உப்பாகவும் ஒளியாகவும் தங்களை மாற்றும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும் என்று இயேசு தன்னுடைய சீடர்களுக்கு கற்று கொடுத்தார். தங்களைச் சுற்றிலும் பார்த்து, அந்த ஆசீர்வாதமான பாக்கியங்களை தங்களுடைய உறவினர்களிடம் செயல்படுத்தி, பின்பு மேல்நோக்கி பார்த்து தேவனிடமிருந்து ஆவிக்குரிய ஒழுக்கங்களை பெற்றுக் கொண்டு தொடர்ந்து கனிதரும் சீடர்களாக விளங்க வேண்டும் என்பதையும் அவர் அவர்களுக்கு கற்று கொடுத்தார்.

மலைப் பிரசங்கத்தின் கடைசிப் பகுதி ஒரு சவாலாக உள்ளது. “நீங்கள் அறிந்து கொண்டதை வைத்து நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?” இயேசு எப்போதும் நடைமுறையில் செயல்படுவதை வற்புறுத்தி கூறுகின்றார்; சீடர்கள் உண்மையில் எதை நம்புகிறார்களோ அதை செய்கிறார்கள். எனவே அவருடைய பரசங்கங்கள் அவர்கள் வாழ்க்கையில் உண்மையாக இருக்க வேண்டுமென்று ஏழாவது வது அதிகாரத்தை மூன்று புத்திமதிகளுடன் துவங்குகிறார்.

ஒப்படைப்பிற்கு மூன்று அழைப்புகள்

நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும். நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன? இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி: நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப் போடட்டும் என்று நீ சொல்வதெப்படி? மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப் போடு; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப் போட வகை பார்ப்பாய். பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள்; உங்கள் முத்துகளைப் பன்றிகள் முன் போடாதேயுங்கள்; போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பக் கொண்டு உங்களைப் பீறிப்போடும்.

மத்தேயு 7:1-6

இயேசுவின் சீடர்கள் ஒருபோதும் அதிகமாக குறை காண்கிறவர்களாக இருக்க கூடாது. நமது காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதைக் காட்டிலும் பிறரின் பிரச்சனைகளை கண்ணோக்கி பார்க்கிற எண்ணமுடையவர்களாக இருக்க வேண்டும். இயேசு இரண்டு கேள்விகளைக் கேட்கிறார். “நீ ஏன் இதைச் செய்கிறாய்?” “நீ எவ்விதமாக எல்லாம் வெற்றி அடையலாம்?” இந்த போதனையை உள்ளே செலுத்துவது எதற்கென்றால், உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை - பெரிய பிரச்சனைகளை எடுத்து போடுவதினால் நீ மற்றவர்கள் தங்கள் கண்களிலிருக்கிற சிறு துரும்பை - சிறிய பரச்சனைகளை எடுத்து போட உதவி செய்ய முடியும். பிறருடைய பிரச்சனைகளில் உதவி செய்யும் முன்னதாக இயேசுவின் சீடர்கள் தங்களுடைய சொந்த பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள கூடியவர்களாக இருக்க வேண்டும்.

1. மத்தேயு 7:2 , இல் நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும் என்று இயேசு கூறுகிறார்.
   (தெரிந்தெடு: தண்டனை, அளவு,வேதனை, இரக்கம்)
2. சரியா தவறா: உண்மையில் இயேசு நாம் பிறரைக் குறித்து எவ்விதமான அபிப்பிராயமும் கொண்டவர்களாக இருக்க கூடாது என்று கூறுகின்றார்.
3. சரியா தவறா: நம்முடைய சொந்த பிரச்சனைகளை பார்க்கும் போது “நான் முதல்” என்ற நோக்கு உடையவர்களாக இருக்க வேண்டும் என்று இயேசு கூறுகின்றார்.
   கீழே குறிப்பிட்டவைகளில் சரியான பதிலை கோடிட்டு காட்டவும்.
4. தங்களுடைய பிரச்சனைகளை பொருட்படுத்தாமல் பிறரை நியாயம் தீர்க்கிறவர்களைக் குறித்து இயேசு என்ன சொல்லுகிறார்?
   அ) அவர்கள் இயற்கையாக புரிந்து கொண்டது எதுவோ அதையே செய்கிறார்கள்.
   ஆ) அவர்கள் மாய்மாலக்காரர்
   இ) அவர்கள் சட்டத்தை உண்மையாகவே புரிந்தவர்கள்
   ஈ) பிறரை நியாயம்தீர்க்க அவர்கள் ஏற்கெனவே நல்லவர்களாக மாறிவிட்டவர்கள்.

தன்னுடைய சீடர்கள் விடாமுயற்சியுடன் தொடர்ந்து எப்போதும் மேலே தேவனை நோக்கியே பார்க்கிறவர்களாக இருக்க வேண்டும் என்று கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள்

என்று இடைவிடாது தொடர்ச்சியாக நடைபெற்று கொண்டேயிருக்கிற வார்த்தைகளை இயேசு உபயோகப்படுத்துகிறார். தேடுங்கள் என்பது தீவிரமாக திரும்பவும் திரும்பவும் கேட்பது. தட்டுங்கள் என்பது தீவிரமாக திரும்பவும் திரும்பவும் தேடுவது. இயேசு தன்னுடைய சீடர்கள் தேவ-உணர்வுடையவர்களாக இருக்க வேண்டுமென்று அழைக்கிறார்.

1. மத்தேயு 7:8 வது வசனத்தில் “கேட்கிறவன் எவனும் பெற்று கொள்கிறான்” என்று இயேசு கூறுகின்றார்.
   (தெரிந்தெடு: இழப்பு, காத்திரு, பெற்றுகொள், சிறிது நேரத்தில் மறந்துவிடு)
2. சரியா தவறா: இரட்சிப்பிற்கான ஜெபத்திற்கு மாத்திரமே இந்த வாக்குதத்தம் பொருந்தும்.
3. சரியா தவறா: இந்த வாக்குதத்தம் ஆவிக்குரிய இரட்சிப்பிற்கும் ஒழுக்கம், மதிப்பு மற்றும் தேவன் தெரிந்தெடுத்து கொடுக்கும் நன்மையான எல்லா ஈவுகளுக்கும் பொருந்தும்.
   கீழே குறிப்பட்டவைகளில் சரியான பதிலை கோடிட்டு காட்டவும்.
4. இந்த வாக்குத்தத்தம் யாருக்கு கொடுக்கப்பட்டுள்ளது?
   அ) இயேசுவின் சீடர்களுக்கு மாத்திரம்
   ஆ) அந்த நாளில் கூட்டத்தில் கேட்டு கொண்டிருந்த மக்களுக்கு மாத்திரம்
   இ) எல்லாருக்கும்.
5. “உங்கள் முத்துக்களை பன்றிகள் முன் போடாதேயுங்கள்” என்று இயேசு கூறியதின் பொருள் என்னவென்றால்
   அ) நற்செய்தியை பாவிகளுடன் பகிர்ந்து கொள்வது காலத்தை வீணாக விரயம் செய்வதாகும்.
   ஆ) இரட்சிக்கப்படுவதற்கு சில மக்கள் நல்லவர்களாக இல்லை.
   இ) ஆசீர்வாதமான பாக்கியங்கள் என்பது பரிசுத்த இரகசியங்கள். அது எல்லாராலும் புரிந்து கொள்ள கூடியது அல்ல.
   ஈ) பகைவர்களிடமும் கேட்க ஆர்வம் இல்லாதவர்களிடமும் கொடுக்க வாங்கல் விவகாரங்களில் ஈடுபடும்போது பகுத்தறிய கூடியவர்களாக இருக்க வேண்டும்.

கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்.

மத்தேயு 7:12

மனித உறவுகளைக் குறித்து இவ்வுலகம் ஒருபோதும் கேள்விப்பட்டிராத, தங்கச் சட்டம் என்று அடிக்கடி கூறப்படுகிற சிறப்பான போதனையுடன் இயேசு தனது பிரசங்கத்தை முடிக்கிறார். இயேசு சொல்லிக் கொண்டிருந்தது இது தான்: “மலையடிவாரத்தில் கூடியிருக்கிற கூட்டத்தில் ஒருவரை எடுத்து கொள்ளுங்கள். அந்த மனிதனின் இடத்தில் உங்களை வையுங்கள். நீங்கள் அந்த மனிதனாக இருந்தால் இயேசுவின் சீடன் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புவீர்கள்? அந்த கேள்விக்கான பதில் தெரிந்தவுடன், அதை நீங்கள் செய்யுங்கள்.”

1. மத்தேயு 7:12 வது வசனத்தில், “மனுஷர் உங்களுக்கு எவைகளை செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.”
2. சரியா தவறா: இயேசுவின் கூற்றுப்படி சட்டம் அனைத்தும் இதுதான்.
3. சரியா தவறா: இந்த போதனைகள் குறிப்பிட்ட சில மக்களுக்கு குறிப்பிட்ட சில நேரங்களில் மாத்திரமே ஏற்றுக் கொள்ள கூடியதாக இருக்கிறது: இல்லையென்றால் சில மனிதர்கள் நமது இரக்கமான அன்புச் செயலை சாதகமாக்கி கொள்கிறார்கள்.
4. இந்த போதனைகளை யாரிடம் செயல்படுத்தி பார்க்க வேண்டும். (பொருந்துபவற்றை கோடிடவும்)

கணவன்/மனைவி	குழந்தைகள்	நண்பர்கள்
சக உழியர்கள்	ஆசிரியர்கள்	மாணவர்கள்
பிற இன மக்கள்	பிற தரத்து மக்கள்	பகைவர்கள்
சகோதர சகோதரிகள்	பிற கிறிஸ்தவர்கள்	இயேசுவை அறியாத மக்கள்

5. பலர் இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு, தேவனுடைய நன்மையான ஈவுகளைப் பெற்றுக் கொள்ளும்படியாக, தடைகள் இருப்பினும் தொடர்ந்து முயற்சி செய்வதில்லை ஏன்?
   - அ) இந்த வாக்குத்தத்தம் உண்மையாயிருப்பதற்கு மிகவும் நல்லதாக இருக்கிறது என்று நான் நினைக்கிறேன்.
   - ஆ) ஒருமுறை அல்லது இரண்டு முறை கேட்ட பின்பு அவர்கள் விசுவாசத்தை இழந்து விடுகிறார்கள்.
   - இ) இந்த வாக்குத்தத்தம் தங்களுக்குரியது அல்ல என்று நினைக்கிறார்கள்.
   - ஈ) இந்த வாக்குத்தத்தம் வேதாகமத்தில் இருக்கிறது என்பது அவர்களுக்கு தெரியாது.
   - உ) இந்த வாக்குத்தத்தத்தின் அர்த்தம் என்னவென்று அவர்களுக்கு புரியாது.
   - ஊ) தங்களைக் குறித்து தேவன் தனிப்படையாக அக்கறை கொள்பவர் என்பதை அவர்கள் விசுவாசிப்பதில்லை.

மத்தேயு 7:1-14 வசனங்களை திரும்பவும் வாசிக்கவும். இந்த பகுதிகளிலெல்லாம் இயேசுவின் போதனைகளுக்கு உங்களை அர்ப்பணித்திருக்கிறீர்களா?................................

எந்த காரியங்களிலெல்லாம் தேவன் உங்களுக்கு உதவி செய்யும்படி கேட்பீர்கள்?
....

ஆழமான அர்ப்பணிப்பை செயல்படுத்துவதற்கு நீங்கள் என்னென்ன காரியங்கள் செய்வீர்கள்? ....

மிகப் பெரிய அழைப்பு

கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 24

தங்க சட்டத்துடன் முடிவடைந்த மூன்று அழைப்புகள் கொடுத்த பின்பு, இயேசு கடினமான ஓர் அழைப்பு கொடுக்கிறார். அர்ப்பணிப்புடன் செயல்வீரர்களாக இயேசுவுக்காக இவ்வுலகத்தை சந்திப்பதற்கான சவால் நிறைந்த அழைப்பாகும். குறிப்பிட்டு கேட்கின்ற ஒரு சவால்!. “பிரச்சனைகளின் பகுதியாகவா அல்லது பிரச்சனைகளுக்குரிய தீர்வின் பகுதியாக நீங்கள் இருக்கப் போகிறீர்களா?”



இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர். கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத் தோலைப் போர்த்துக் கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்; முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப் பழங்களையும் பறிக்கிறார்களா? அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும். நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்க மாட்டாது; கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்க மாட்டாது. நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும். ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள். பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானே அல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன். *மத்தேயு 7:13-23*

“எவ்விதமான சீடன் நீ” என்று இந்த வேதபகுதியின் முதல் பகுதி கேட்கின்றது. இதற்கு சாத்தியமாக இரண்டு பதில்கள் உள்ளது: பலரில் ஒருவன் அல்லது சிலரில் ஒருவன். அந்த பலர் தாங்கள் உப்பாகவும் ஒளியாகவும் இருப்பதாக வெளிப்படையாக கூறுவார்கள். ஆனால் அவர்கள் அப்படியிருப்பதில்லை. பிரச்சனைகளின் தீர்வின் ஒரு பகுதியாக இருப்பது எளிதென்று அவர்கள் நினைக்கிறார்கள். அதேவேளையில் அந்த சிலர் அது எளிதானது அல்ல என்பதை அறிந்திருக்கிறார்கள். இவர்கள் அந்த வாசல் சிறியது என்பதையும் அந்த வாசலைத் தொடர்ந்து செல்லுகின்ற வழியும் இடுக்கமான பாதை, கடினமான பாதை, ஒழுக்கமான பாதை என்பதையும் அவர்கள் அறிந்திருக்கிறார்கள்.

இந்த வேத பகுதியின் இரண்டாவது பாகம் “நீ உண்மையான சீடனா? அல்லது பொய்யான சீடனா?” என்று கேட்கின்றது. தன்னுடைய உண்மையான சீடர்களால் கூட இதற்கான வித்தியாசத்தை கூற முடியாது என்று இயேசு பின்னர் வேறொரு உவமானத்தில் கூறுகின்றார். ஒரு குறிப்பட்ட காலத்திற்கு பின்னர், அந்த கனியை பரிசோதித்த பின்பே உண்மையான சீடனுக்கும் பொய்யான சீடனுக்கும் உள்ள வித்தியாசத்தை கண்டு கொள்ள முடியும்.

மூன்றாவது பாகம், “நீ வாயின் வார்த்தைகளில் மாத்திரம் சொல்லுகின்ற சீடனா அல்லது பிதாவின் சித்தத்தின் படி செயல்படுகிற சீடனா?” என்று கேட்கின்றது. பல ஆச்சரியமான

நல்ல காரியங்களை செய்வதினால் அவர்கள் இயேசுவோடு உண்மையான நல்லுறவு கொண்டவர்கள் என்று உறுதியாக கூற முடியாது. வெறும் வாய் வார்த்தைகளினால் மாத்திரம் பேசுகின்ற சீடர்களைக் குறித்த இயேசுவினுடைய பதில் இதுதான்: "நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்றுப் போங்கள்" என்பதாகும்.

1. மத்தேயு7:21 வது வசனத்தில் இயேசு, "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பான்" என்று கூறுகின்றார்.
2. சரியா தவறா: உப்பாகவும் ஒளியாகவும் உலகத்தில் இருப்பது எளிதானது.
3. சரியா தவறா: நேர்மையான காரியங்களை நம்புகிறவர்கள், நீதியான காரியங்களை பேசுகிறவர்கள் மற்றும் இயேசுவை "கர்த்தாவே" என்று கூப்பிடுகிறவர்கள், அவர் சொல்லுகின்ற காரியங்களை செய்யாவிட்டாலும் உண்மையில் அவர்களே அவருடைய சீடர்கள்.
   கீழே குறிப்பட்டவைகளில் சரியான பதிலை கோடிட்டு காட்டவும்.
4. மத்தேயு 13:24-30 வாசிக்கவும். இந்த உவமையின்படி உண்மையான விசுவாசிகளுக்கும் பொய்யான விசுவாசிகளுக்கும் உள்ள வேறுபாடு என்ன? அவர்கள் எங்கு வளருகிறார்கள்?
   அ) அவர்கள் செய்கின்ற செயல்களினால்
   ஆ) அவர்கள் எவ்வளவு காலம் வாழ்கிறார்கள்
   இ) அவர்கள் எந்த வித்திலிருந்து வந்தார்களோ அங்கே
5. இயேசு கூறியபடி பொய்யான தீர்க்கதரிசிகளை கண்டு பிடிப்பது எப்படி?
   அ) அவர்களுடைய கனிகளினாலே
   ஆ) அவர்களுடைய தோற்றத்தைத் பார்த்து
   இ) அவர்களுடைய வார்த்தைகளினாலே
   ஈ) உண்மையான விசுவாசிகளிடமிருந்து தங்களை பிரித்து கொள்ளுகின்ற விதத்தைப் பார்த்து.
6. தன்னை "கர்த்தாவே" என்று கூப்பிட்டு விட்டு உண்மையாக அவரை விசுவாசித்து அவருக்கு கீழ்ப்படியாதவர்களைக் குறித்து இயேசு என்ன சொல்லுகிறார்?
   அ) "உங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு செய்தீர்கள்"
   ஆ) "என்னை விட்டு அகன்று போங்கள்"
   இ) "முயற்சித்து கொண்டேயிருங்கள்"
   ஈ) " என்னை கர்த்தாவே என்று கூப்பிடுவதே போதுமானது"

நீங்கள் இயேசுவின் உண்மையான சீடன் என்பதை எப்படி அறிந்து கொள்வீர்கள்? ....

....

இயேசுவுடனான உங்கள் உறவில் ஏதேனும் மாய்மாலம் இருக்கிறதென்று கண்டால் அதனை எவ்விதமாக வேருடன் அறுத்து எறிவீர்கள்?

....

....

முடிவுரை

கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 24

ஆகையால் நான் சொல்லுகிற இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனஷனுக்கு ஒப்பிடப்படுவான். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதினபோது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்.

மத்தேயு 7:24-27

1. மத்தேயு 7:24 இல் இயேசு, நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவன் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின மனிதனுக்கு ஒப்பாயிருக்கிறான் என்று கூறினார்.
   (தெரிந்தெடு: அவர்களைப் போல, திரும்பவும் திரும்பவும் பல தடவை சொல்லுவது, இவைகளின் படி செய்கிறவன், அவர்களை மறந்து விடுவது)
2. சரியா தவறா: இயேசுவின் வார்த்தைகளைக் கேட்பதும், அவைகளின்படி செய்வதுமாகிய இரண்டும் ஒன்றல்ல.
3. சரியா தவறா: தனக்கு கீழ்ப்படிகிறவர்கள் புயலினூடே செல்லவேண்டியதில்லை என்று இயேசு போதித்தார்.
4. புயலில் அழிந்து விடாமல் ஜீவித்திருப்பதற்கான வழி
   அ) இயேசுவை விசுவாசிப்பது
   ஆ) இயேசுவை "கர்த்தாவே" என்று கூப்பிடுவது
   இ) இயேசு சொல்லியபடி செய்வது
   ஈ) இயேசுவின் போதனைகளைக் குறித்து ஆச்சரியப்படுவது

இயேசுவின் வார்த்தைகளை நம்புகிறவர்கள் ஆனால் அதின்படி செயல்படாதவர்களிடம் நீங்கள் என்ன சொல்லுவீர்கள்?

....

....

அப்படிப்பட்ட யாரையாவது உங்களுக்கு தெரியுமா?

....

முடிவாக இயேசு கிறிஸ்துவின் சீடராக உங்களுடைய தீர்மானங்களை எழுதுங்கள்

அ) தேவனை நோக்கி
ஆ) குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் பிறரிடம் உங்கள் உறவைப் பற்றி
இ) பிற சீடர்களுடன் - ஆலயம்
ஈ) பகைவர்களுடனும் நற்செய்தியை அறியாதவர்களுடனும்